பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 14 செவ்வாய்க்கிழமை (30.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :277

## 'சுடர் ஒளி' அலுவலகம் மீது கைக்குண்டுகள் வீச்சு!

## ஊழியர் உயிரிழப்பு; மேலும் மூவர் காயம்!

கொழும்பு, ஓகஸ்ட் 30

உதயனின் சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி'யின் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகம் மீது நேற்றுமாலை பாரிய கைக்குண்டு வீச்சு நடைபெற்றது. இதில் ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டார் மேலும், மூவர் காயமடைந்தனர். அடுத்தடுத்து இரண்டு கைக்குண்டுகள் வெடித்ததில் அலுவலக வாகனங்களும் சேதமடைந்தன.



சேதமடைந்த வாகனங்களில் ஒன்று....

நேற்று மாலை 6 மணியளவில் பத்திரிகைக் காரியாலயம் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அலுவலகத்தின் முன் வாயிலின் வெளியே இருந்து அடுத்தடுத்து இரு கிரனேட்டுக்கள் அலுவலகத்திற்குள் வீசப்பட்டன. ஹெல்மெட் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் குண்டுகளை வீசிவிட்டுத் தப்பிச் சென்றார் என்று நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

இரவுக் கடமைக்காக வந்த ஊழியர் ஒருவருக்காக பாதுகாப்பு ஊழியர் கதவைத் திறந்து வழிவிட்ட சில வினாடிகளில், திறந்திருந்த கதவு வழியாகப் கிரனேட்டுக்கள் வீசப்பட்டன.



டேவிட் செல்வரத்தினம்

அவை அலுவலகத்திற்குள் வீழ்ந்து அடுத்தடுத்து பாரிய சத்தத்துடன் வெடித்தன. கதவருகே நின்றிருந்த பாதுகாப்பு ஊழியரான டேவிட் செல்வரத்தினம் இதில் படுகாயமடைந்தார். நெஞ்சிலும் வயிற்றுப் பகுதியிலும் அவருக்குக் காயங்கள் ஏற்பட்டன. வைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்ட அவர், நேற்றிரவு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவருக்கு வயது 52, கொழும்பு கொட்டாஞ்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட

(18ஆம் பக்கம் பார்க்க)



சம்பவ இடத்தில் பொலீஸார்....

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கே முதலிடம் தருவாராம் மஹிந்த

### பிரபாகரனுடன் பேசவும் தயார் என்கிறார்

கொழும்பு, ஓகஸ்ட் 30

**அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டாரானால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கே முன்னுரிமை அளிப்பார் என்று தெரிவித்துள்ளார் பிரதமரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ. தீர்வுக்காக விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் பேசுவதற்குத் தான் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸியான 'அஸோஸியேட் பிரஸ்' நிறுவனத்திற்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்திலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் விடயத்திலும் பிரதமர் தொடர்ந்தும் மௌனம் சாதிக்கிறார் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டிவரும் இந்தத் தருணத்தில் பிரதமரின் கருத்து வெளியாகி உள்ளது.

"ஜனாதிபதியாக நான் தெரிவு செய்யப்பட்

(18ஆம் பக்கம் பார்க்க)

### எழுச்சி நிகழ்வன்று ஏ9 பயணத்தை தவிர்க்கக் கோரிக்கை

எதிர்வரும் முதலாம் திகதி கிளிநொச்சியில் இடம்பெறவுள்ள தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வையொட்டி அன்று நண்பகல் 12 மணிக்குப் பின்னர் ஏ9 பாதையூடான போக்குவரத்தை தவிர்க்குமாறு எழுச்சிப்பேரவையினர் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்ள உள்ளனர் என்றும்-

ஆகவே, போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதைத் தடுக்கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

### தயாராகிறது 'பவ்ரல்'

கொழும்பு, ஓக.30

தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணித்து வரும் பவ்ரல் (நேர்மையானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை) அமைப்பு இவ்வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கத் தயாராகிவருகின்றது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தேர்தலுக்கான திகதியை அறிவித்த

(18ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத் தமிழர்களிடம் மீண்டும் பொலீஸ் பதிவு!

கொழும்பு, ஓக.30

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வாழும் தமிழர்கள் மத்தியில் மீண்டும் பொலீஸ் பதிவு நடைமுறையைக் கொண்டு வருவதற்கு அரசு முடிவுசெய்துள்ளது. இன்னும் சில தினங்களில் அனைத்துப் பொலீஸ் நிலையங்களிலும் இது நடைமுறைக்குவரும் என்று கொழும்பு மாவட்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார். சில பொலீஸ் நிலையங்களில் ஏற்கனவே பதிவுக்கான விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மூன்றரை வருடங்களுக்கு முன்னர் தலைநகரில் இந்த பொலீஸ் பதிவு நடைமுறையில் இருந்தது. இதனால் தமிழ்மக்கள் பெரும்

(18ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் பேச்சுகள்: இடம் இன்னும் முடிவில்லை

கொழும்பு, ஓக.30

போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசு - புலிகள் இடையே நடக்க இருக்கும் பேச்சுகளை எந்த இடத்தில் நடத்துவது என்பதுபற்றி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்று சுகாதார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான நிமால் சிறிபால டி சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

பேச்சுகளை கிளிநொச்சியில் நடத்துவதற்குப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ள

(18ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.நா. கூட்டத் தொடரில் பங்கேற்க

## அடுத்தவாரம் ஜனாதிபதி அமெரிக்காவுக்கு விஜயம்

கொழும்பு, ஓக.30

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அடுத்தவாரம் அமெரிக்கா செல்லவுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அங்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் ஆகியோரையும் உலக நாடுகளின் தலைவர்களைச் சந்திக்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி சந்திரிகா அமெரிக்கா செல்கிறார். அவருடன் வெளிவிவகார அமைச்சர் அநுர பண்டார

(18ஆம் பக்கம் பார்க்க)

### அதிபர் தேர்தல் தொடர்பாக

## பிரதமர் மஹிந்தவுடனேயே பேச்சு; ஜனாதிபதி பற்றி அக்கறையில்லை

### விமல் வீரவன்ஸ திட்டவட்டம்

கொழும்பு, ஓக.30

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் மட்டுமே நாங்கள் பேச்சு நடத்துகிறோம். இந்த விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகாவைப் பற்றி எமக்கு எந்த அக்கறையும் இல்லை".

- இவ்வாறு அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ஸ.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தல் குறித்து பிரதமரு

(18ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வவுனியா பிரகடனத்தை வலியுறுத்தும் யாழ். எழுச்சி நிகழ்வு செப். 30 இல்

கொழும்புத்துறை,ஓக.30

தமிழர் தேசியப் பிரகடனத்தை வலியுறுத்தும் மக்கள் எழுச்சி நிகழ்வு அடுத்தமாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் பொது அமைப்புகளின் ஒன்றியம் ஆகியவை மேற்கொண்டுள்ளன.

இது குறித்த ஏற்பாட்டுக்குழுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் அடுத்தமாதம் 30ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள எழுச்சி நிகழ்வு தொடர்பான பணிகளை முன்னெடுப்பதற்காக பிரதேச, கிராம மட்டங்களிலும் துறைசார்ந்த மட்டங்களிலும் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த எழுச்சி நிகழ்வுக்கு முன்னதாக அடுத்தமாதம் 25ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பேராளர் மாநாடு ஒன்றும் நடத்தப்படவுள்ளது.

தமிழ்த்தேசிய உணர்வலையை சர்வதேசத்திற்கு ஒருமுகமாக எடுத்துக்காட்ட தமிழ்மக்கள் அனைவரையும் எழுச்சி நிகழ்வில் ஒன்றிணையுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஒ-30)

## தெய்வீக இசையரங்கில் நிகழ்ச்சி மாற்றம்

யாழ்ப்பாணம்,ஓக.30

நல்லூர் முருகன் ஆலய பெருந்திருவிழாக் காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம், துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் 21ஆம் நாளான இன்று செவ்வாய்க்கிழமை ந.பரந்தாமனின் பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது.

அணிசெய் கலைஞர்களாக வயலின் - எஸ்.விஸ்வமூர்த்தியும், மிருதங்கம் - கே.அனந்தகோபனும், கடம் - கே.ஆர்.சங்கரும் பங்குபற்றுவர்.

இந்நிகழ்வில் இன்று இடம்பெறவிருந்த எல். திலகநாயகம்போலின் பாட்டுக்கச்சேரி தவிர்க்கமுடியாத காரணத்தால் நடைபெறாது என அறிவிக்கப்பட்டது.

(முன்னர் வந்த செய்தி 5ஆம் பக்கத்தில்) (9)

## ஊடகவியலாளருக்கு

யாழ்ப்பாணம்,ஓக.30

ஊடகவியலாளர் கழகம் அமைப்பது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இன்று பிற்பகல் இடம்பெறவிருந்த கூட்டம் கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதாக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையப் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நேற்றிரவு அறிவித்துள்ளார்.

(முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படவிருந்த கோதுமைமா பழுது

கரவெட்டி,ஓக.30

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க எடுத்து வரப்பட்ட கோதுமைமாபழுதடைந்து, புழுக்களும் வண்டுகளும் காணப்பட்டமை சுகாதாரப் பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் களஞ்சியத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட கோதுமை மா மூடைகளில் 29 மூடைகள் இவ்வாறு பழுதடைந்துள்ளன.

உலக உணவுத்திட்டத்தின்கீழ் இம்மாதம் வழங்குவதற்கென அனுப்பிவைக்கப்பட்ட பொருள்களை வடமராட்சி சுகாதாரப் பரிசோதகர் ஆர்.ஈஸ்வரன், சுகாதார வைத்திய அதிகாரி கலாநிதி சி.சி. சொலமன் ஆகியோர் பரிசோதித்தனர். அப்பொழுதே பழுதடைந்த கோதுமைமா மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இது தொடர்பாக பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரிடம் கேட்டபோது:-

கடந்த மே மாதம் 5ஆம் திகதி மருதங்கேணி களஞ்சியத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட 54 கோதுமை மா மூடைகளில் புழுக்களும் வண்டுகளும் இருந்தமை பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டு விநியோகிக்காது தடுத்து வைக்கப்பட்டன.

அதேபோல் இம்மாதம் முதலாம் திகதியும் 9ஆம் திகதியும் அனுப்பிவைக்கப்பட்ட தலா 29 மூடைகள் பழுதடைந்திருந்ததால் தடுத்துவைக்கப்பட்டன.

இது தொடர்பாக மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். பழுதடைந்த மா மூடைகளைத் தாம் பொறுப்பேற்பதாகவும் -

பதிலாக வேறு மா மூடைகள் அனுப்பிவைப்பதாகவும் - அவர் தெரிவித்தார் - என்றனர்.

இந்த மா உலக உணவுத் திட்டத்தின் கீழ் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து பொற்பதி, அம்பன், குடத்தனை ஆகிய பிரதேசங்களிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் வாழும் மக்களுக்கு விநியோகிப்பதற்காக அனுப்பிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-70-202)

## கிளிநொச்சியில் வீதி விபத்து; இருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஓக.30

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - 'ஹைஏஸ்' வாகனம் சம்பந்தப்பட்ட விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.


முற்பகல் 9 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ். நாவாந்துறையைச் சேர்ந்தவர்களான அல்பிறட் செபமாலைதாஸ் (வயது 43), செலஸ்தீன் வசந்தன் (வயது 28) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட அவர்கள் இருவரும் பின்னர் மேலதிக சிகிச்சையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர். அவர்கள் இருவரில் செபமாலைதாஸ் நேற்று மாலை 6 மணிக்கு கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ஒ-12-15-ரி)

## நவநாள் ஆராதனை

குருநகர்,ஓக.30

யாழ். அடைக்கல அன்னை ஆலய வருடாந்த திருவிழாவிற்கான நவநாள் ஆராதனை இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. நாளாந்த ஆராதனைகள் தினமும் பிற்பகல் 5.30 மணிக்கு செபமாலையுடன் நடைபெறும். (ஒ-51)



நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவின் இருபதாம் நாளான நேற்று தேவிகள் சமேதராக வேலவர் கைலாசவாகனத்தில் திருவீதியுலா வந்த காட்சி. (படம்:- பிரபா)

# புதிய முறைகளில் புலிகள் தாக்குதல் நடத்துவார்களாம்

## இராணுவப் பேச்சாளர் பூச்சாண்டி

கொழும்பு ஓக,30

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது அரசியல்வாதிகளை கொலை செய்வதற்கு விடுதலைப் புலிகள் புதிய முறைகளைக் கடைப்பிடிக்கக் கூடும். அதனால் அரசியல் கூட்டங்களில் சந்தேகத்திற்கிடமான பேர்வழிகள் பற்றி மக்கள் கவனமாக இருக்கவேண்டும்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் காமினி ரத்னாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளுக்கு மாலையிடுதல், அரசியல் கூட்டங்களில் வெடிகள் கொளுத்துவது போன்ற சம்பவங்கள் அபாயத்தைஏற்படுத்தலாம். அரசியல் வாதிகளைக் கொலைசெய்வதற்கு இவ்வாறான சந்தர்ப்பங்களை புலிகள் முன்பு போலவே பயன்படுத்திக் கொள்ளக்கூடும். இந்தியப் பிரதம மந்திரி பதவிக்குப் போட்டியிட்ட ராஜீவ் காந்தி மாலையிடும் சம்பவத்தில் கொல்லப்பட்டார்.

இலங்கையில் அரசியல் கூட்டங்களில் வெடிகளைக் கொளுத்தி மக்களின் கவனத்தைத் திருப்பியதின் மூலம் அரசியல் தலைவர்களை தற்கொலை குண்டுதாரிகளைக் கொண்டு கொலை செய்தார்கள். புலனாய்வுத் தகவல்களின்படி ஏற்கனவே விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கொழும்பிற்குள் ஊடுருவியிருக்கிறார்கள் என்று பிரிகேடியர் ரத்னாயக்க தெரிவித்தார். (ப)

# 626 குடும்பங்கள் வீடமைக்க 2ஆவது கட்டக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஓக.30

உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் இதுவரை 626 குடும்பங்களுக்கு 2ஆம் கட்டமாக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவிட்டன என்று யாழ். மாவட்டத்திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் நிதியுதவியுடன் 1000 வீடுகளை அமைப்பதற்கான திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2ஆவது கொடுப்பனவுகள் 626 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன.

மூன்றாவது கட்டக் கொடுப்பனவு 80 ஆயிரம் ரூபா இந்தவாரம் 150 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முதலாம் கட்டக்கொடுப்பனவுகள் ஜூலைமாதத்தில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உலகவங்கி நிதியுதவியுடன் மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட 500 வீடுகள் அமைப்பதற்கான முதற்கட்ட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவிட்டன.

405 குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் இக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் இந்தவாரம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(9-204-203)

# திருமறைக் கலாமன்ற கலைஞர் பிரான்ஸில் விபத்தில் மரணம்!



யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் நாடகக் கலைஞரான எஸ்.ஜோன்சன் பிறேமானந்த் (வயது - 35) பிரான்ஸில் இடம் பெற்ற விபத்தொன்றில் உயிரிழந்தார். கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த ஜோண்சன் பிரான்ஸில் ரயில் பாதையொன்றில் தவறி விழுந்த தனது ஆவணமொன்றைக் குனிந்து எடுக்கமுற்பட்டவேளை பின்னால் வந்த ரயில் இவரை மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.


கடந்த இரு மாதங்களுக்கு முன்னரே இவர் வேலை வாய்ப்பிற்காகப் பிரான்ஸ் சென்றிருந்தார்.

திருமறைக் கலாமன்றம் வருடா வருடம் மேடையேற்றும் திருப்பாடுகளின் காட்சியில் கடந்த 11 வருடங்களாக பிரதான இயேசுநாதர் பாத்திரம் ஏற்று நடித்து தனது நடிப்புத் திறமையின் மூலம் ரசிகர்களிடையே நல்வரவேற்பைப் பெற்றிருந்தவர் ஜோண்சன். இறுதியாக இவ்வாண்டு நடைபெற்ற திருப்பாடுகளின் காட்சியிலும் அவர் இயேசு பாத்திரமேற்று நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது இறுதிச் சடங்கு பிரான்ஸில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (8-190)
















நல்லூரர் கந்தன் ஆலய உற்சவகாலத்தில் யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழு வருடாந்தம் வெளியிடும் நல்லைக்குமரன் மலரின் வெளியீட்டுவிழா நல்லை திரு ஞான சம்பந்தர் ஆதீனத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையுரையையும், நல்லை அதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகள், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்சொரூபானந்தா ஆகியோர் ஆசியுரைகளையும் மலரின் பதிப்பாசிரியர் ந.விஜயசுந்தரம் வெளியீட்டுரையையும் நிகழ்த்துவதையும், நிகழ்வில் மாவை. ஆதீன முதல்வர் சிவஸ்ரீ சு.து.சண்முகநாதக் குருக்களுக்கு மாநகராட்சி ஆணையாளர் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பகீரதன்)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## பொலீஸ் உயர் அதிகாரிகள் பொறுப்புடன் செயலாற்றுவார்களா?

மலையகம், பொகவந்தலாவையில் தோட்டப் பகுதியில் துப்பாக்கிகளும் தோட்டாக்களும் கண்டு எடுக்கப்பட்டதாக வெளிவந்த தகவலின் உண்மைத் தன்மை கண்டறியப்பட வேண்டும். மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் இவ்வாறு வலியுறுத்தி இருக்கிறார்.

குறிப்பிட்ட தோட்டப்பகுதியில் பொலீஸார் பயணம் செய்து கொண்டிருந்தவேளை, இனந்தெரியாத ஒருவர் வெடிமருந்துகள் மற்றும் துப்பாக்கி ரவைகள் அடங்கிய பொதி ஒன்றைப் போட்டுவிட்டு ஓடினார் என்று பொலீஸ் தகவல்கள் தெரிவித்தன. அதனை அடிப்படையாகக் கொண்டு ஊடகங்களில் செய்திகளும் வெளிவந்தன. ஆனால் பல நாள்கள் கழிந்தும் அவ்வாறு செய்தவர் யார் என்பதனைப் பொலீஸார் இன்னும் கண்டுபிடிக்கவில்லை - இனங்காணவில்லை.

பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்ட தகவல் உண்மை தானா என்பதில் சந்தேகம் எழுப்பியிருக்கிறார் சந்திரசேகரன். மலையகத்தில் தீவிரவாதம் ஊடுருவி உள்ளது என்ற பொய்யான தோற்றத்தை உருவாக்குவதற்காக பொலீஸ் தரப்பினரால் இட்டுக்கட்டப்பட்டதே - சோடிக்கப்பட்டதே- இத்தகவல் என்று கருதுவதில் எவ்வித தப்பும் இல்லை. வடக்கு-கிழக்கில் முன்னர் இத்தகைய சோடிப்புகளைச் செய்வதில் பொலீஸாரும் படையினரும் வல்லவர்களாகத் திகழ்ந்தார்கள் என்பது மறைக்கப்படமுடியாத ஒன்று.

இப்போதும் -

அவசரகாலச்சட்டம் நடைமுறையில் உள்ளது. அதன் ஊடாகப் பொலீஸாருக்கும் படையினருக்கும் அதீத அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி மலையகத்தில் தீவிரவாதம் பரவியிருப்பதாக ஒரு தோற்றத்தை உருவாக்குவது பொலீஸாருக்கு ஒன்றும் கடினமானது அல்ல.

அதனூடாக மலையகத் தமிழ் இளைஞர்களைக் கைது செய்வதும் சித்திரவதை செய்வதுமே பொலீஸாரின் உள்நோக்கமாக இருக்கும் என்பது எந்தவிதத்திலும் நிராகரிக்கப்படக் கூடியது அல்ல.

மலையகத்திலும் சரி, வடக்கு-கிழக்கிலும் சரி தேடுதல் என்ற பெயரில் தமிழ் இளைஞர்களைக் கைது செய்வது, ஒரு வகையில் பொலீஸாருக்கும் படையினருக்கும் வருமானம் தரும் கைங்கரியம் என்பதனை இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டி இருந்தோம்.

அதுமட்டுமன்று. பெரும் எண்ணிக்கையான தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்து காட்டினால் அந்தக் 'கெட்டித்தனத்'துக்காக மேலிடத்திடம் பட்டியும் முத்திரையும் பெறலாம் என்பதும் இன்னொரு லாபம்.

படை அல்லது பொலீஸ் உயர் அதிகாரிகளுக்கு இது ஒன்றும் தெரியாததும் அல்ல. ஆனால் எப்போதுமே இத்தகைய இட்டுக் கட்டுதல்களை உயரதிகாரிகள் நிராகரிப்பதில்லை. அது அவர்களின் வழமை-சேவை நடைமுறை!

ஆகையால் -

பொலீஸ் மா அதிபரும், உயர் அதிகாரிகளும் இந்த விடயத்தை விசாரித்து ஆராய்ந்து உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் கேட்பது நியாயமானதும் பொருத்தமானதும் அவசியமானதும் ஆகும்.

மேற்சொன்னவர்கள் இதனைச் சாதாரணமாகக் கருதி மலையகத்தில் தேடுதல்கள் நடத்தப்படுவதைத் தொடர விடுவார்களாயின், அராஜகமும் படைகளின் அடாவடித்தனமும் அதிகரிக்கும். நாடு எல்லா வகைகளிலும் பின்னோக்கிச் செல்ல அது வழி செய்யும் என்றும் அவர் எச்சரித்திருக்கிறார்.

அவசரகாலச் சட்டம் முன்னர் நடைமுறையில் இருந்த காலங்களில் எல்லாம், படையினர் தமது அதிகாரத் தனத்தினைப் பயன்படுத்தி தமிழர்களைக் கைதுசெய்தும், நீண்ட காலமாகத் தடுத்து வைத்தும் சித்திரவதை செய்தும் அவர்களின் வாழ்வைச் சிதைத்தமை ஏற்கனவே பதியப்பட்ட பெரும் அட்டூழியம். தமிழர்களை மனிதர்களாகக் கருதாது மனிதாபிமானம் இன்றிக் கொடுமைப்படுத்திய சம்பவங்கள் பலப்பல.

கதிர்காமரைப் படுகொலை செய்தவர்களையும் அக்கொலையில் சம்பந்தப்பட்ட சூத்திரதாரிகளையும் கண்டுபிடிப்பதற்காகவே- அது தொடர்பான விசாரணைகளை விரைவில் பூரணமாக்குவதற்காகவே - உடனடியாக அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டதாகவும், நீடிக்கப்பட்டதாகவும் தமிழர்களுக்குத் தொல்லை கொடுப்பதற்காக அல்ல என்றும் அரசாங்கத் தரப்பினர் தெரிவித்தனர் - இப்போதும் தெரிவிக்கின்றனர்.

ஆனால் படைத்தரப்பினரும் பொலீஸாரும் தமக்குக் கிடைத்த அதிகாரங்களை அனேகமாக முழுக்க முழுக்கத் தமிழர்களுக்கு எதிராகவே பாணங்களாக மாற்றுகிறார்கள். கொழும்பிலும் சரி, சிங்கள மக்கள் செறிந்துவாழும் ஏனைய பகுதிகளிலும் சரி, பெரிய அளவில் - ஒப்பீட்டளவில் - பெரும்பான்மை இனத்தவர் மீது அவசரகாலச் சட்ட அதிகாரங்கள் கைவைக்கவில்லை.

இன்றைய நிலையில் -

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளதால், அவசர காலச் சட்டம் நீடிக்கப்படமாட்டாது என ஓரளவு எதிர்பார்க்கலாம். இத்தேர்தல் குறித்து நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதியின் தரப்பில் இருந்து வெளிவரும் மாறுபாடற்ற கருத்துக்கள் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படமாட்டாது என்பதனை உறுதிப்படுத்துவனவாக உள்ளதும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தமக்குக் கிடைத்த அதிகாரங்களைத் தமிழர்களை இழக்காரமாகக் கருதி அவர்களுக்கு எதிராகத் தமது உத்தியோகத்தர்கள் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்பதில் பொலீஸ் மற்றும் படை உயர் அதிகாரிகள் கண்டிப்பாக இருப்பார்களேயானால், பொகவந்தலாவையில் வெடிப்பொருள்கள், துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டதான தகவல்கள் போன்று, தமிழர்களைக் குறிவைக்கும் அத்துமீறல்களையும் அராஜகத்தையும் நீக்க முடியும்.

ஆனால், மக்களுக்குப் பதில்சொல்லவல்ல பொறுப்பு வாய்ந்த உயரதிகாரிகளாக அவர்கள் நடந்து கொள்வார்களா- செயற்படுவார்களா- என்பது எப்போதும் சந்தேகத்துக்கும் மறுபக்கப் பார்வைக்கும் உட்பட்டதே.

# இராணுவ வலிமை மூலம் சிங்களவர்களை மண்டியிட வைத்துவிட்டனர் விடுதலைப் புலிகள்

## 'இந்து' ஆங்கில நாளேட்டின் ஆசிரியர் சொல்கிறார்



சென்னை,ஓக.30

தமிழீழ விடுதலைப் புலிகள், தங்களது இராணுவ வலிமை மூலம் சிங்களவர்களை மண்டியிட வைத்துவிட்டனர். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளை கடுமையாக விமர்சித்து வரும் தமிழக 'இந்து' ஆங்கில நாளேட்டின் பிரதம ஆசிரியர் என். ராம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

தமிழகத்திலிருந்து ஒளிபரப்பாகும் 'சன் செய்தி' என்ற செய்தி தொலைக் காட்சியில் கதிர்காமர் கொலை தொடர்பாக 'இந்து' ராமிடம் எழுத்தாளர் மாலன் நேர்காணல் கண்டார்.

இந்த நேர்காணலில் 'இந்து' என்.ராம் தெரிவித்ததாகக் கூறி இணையத்தளம் ஒன்று மேற்படி செய்தியை வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியில்-

கட்டுநாயக்க விமானத் தளத்தைத் தகர்த்தபோதே விடுதலைப் புலிகள் தங்களது இராணுவ வலிமையை வெளிப்படுத்தி விட்டனர்.

தங்களது இராணுவ வலிமை மூலம் சிங்களவர்களை விடுதலைப் புலிகள் மண்டியிட வைத்துள்ளனர். இனியொரு போருக்கு சிங்களவர்களும் தயாராக இல்லை. சிங்கள இராணுவமும் தயாராக இல்லை. சிங்கள இராணுவத்தில் 20 முதல் 30 சதவீதத்தினர் ஓடித் தப்பி விட்டனர்.

அரசியல் களத்தில் சந்திரிகாவும், ரணிலும் இணைந்து நின்றால் அவர்கள் அரசியல் பலம்தான் பெறுவார்கள். விடுதலைப்புலிகளின் இராணுவப் பலத்தின் முன் இந்த அரசியல்வலு பலமற்றதுதான்.

ஆயுதப்போராட்டம் நடைபெறும் சூழலில் அனைவரும் அரசியல்வழி தீர்வுதான் சரியானது என்று கூறிவருகிறோம். ஆனால், உண்மையில் இராணுவ ரீதியான தீர்வுதான் ஏற்பட்டு வருகிறது ; ஏற்படும்.

ஸ்ரீலங்காவில் கொல்லப்பட்ட கதிர்காமர் போன்று குமாரி ஜெயவர்தனா, உய்யங்கொட போன்ற அறிவாளிகள் இன்னமும் உயிரோடுதான் இருக்கின்றனர். ஆனால், இராணுவ ரீதியான போராட்டத்தில் இத்தகைய அறிவாளர்கள் பங்களிப்பு மிக மிகக் குறைவு.

- அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதற்காக போராடியவர் லக்ஷ்மன் கதிர்காமர் - என்றார்.

கதிர்காமர் இந்தியாவின் மிக நெருங்கிய நண்பர் என்றுகூறிய என்.ராம். வழமை போல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் தேசியத் தலைவரையும் ஒருமையில் விமர்சிக்கவும் தவறவில்லை - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ)

# சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய நான்கு கடைகளுக்கு அபராதம் விதிப்பு

கரவெட்டி,ஓக.30

சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கியதாகத் தெரிவித்து 4 கடைகள் சீல்வைக்கப்பட்டதுடன், கடை உரிமையாளர்களுக்குத் தலா 3 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

கரவெட்டி, நெல்லியடிப் பிரதேசத்திலுள்ள 2 உணவகங்களும், 2 தேநீர்ச்சாலைகளுமே இவ்வாறு சீல்வைக்கப்பட்டன.

அண்மையில் மேற்படி உணவகங்கள் மற்றும் தேநீர்ச்சாலைகள் மீது பிரதேச சுகாதாரப் பரிசோதகர் குழு திடீர் சோதனையை மேற்கொண்டது.

அப்பொழுது சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்த நான்கு கடைகளை இனங்காணப்பட்டு சீல் வைக்கப்பட்டது. பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ் வழக்கு கடந்த 19 ஆம் திகதி பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான், நான்கு கடைகளும் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிவந்தமையாலும் ஊழியர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமையாலும் கடை உரிமையாளர்களுக்குத் தலா 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். மேலும், நான்கு கடைகளையும் ஒரு மாதம் வரை பூட்டி, கடைகளில் சுகாதாரத்தைப் பேணுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் - அது தொடர்பான சுகாதாரப் பரிசோதகர்களின் அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்கும்படியும் உத்தரவிட்டார்.

(எ-70-202)

### உதயவாக்கு

நாம் பலவீனமானவர்களாக இருக்கின்றோம் அதனால் தான் துன்பப்படுகின்றோம்.
- சுவாமி விவேகானந்தர்.

### நாளை

ஆவணி 15
புதன்கிழமை
31.08.2005
திதி: துவாதசி
முன்னிரவு: 07.05 வரை
நட்சத்திரம்:புநர்பூசம்
முற்பகல் 10.02 வரை
சுபநேரம்: 04.35 - 06.05
ராகுகாலம்: 12.05 -01.35
(யாவும் பழைய நேரப்படி)

# மனோ தித்தவெல தலைமையில் விசேட குழு இன்று யாழ். வருகிறது

## மீள்கட்டுமானப் பணிகள் குறித்து ஆராயும்

யாழ்ப்பாணம்,ஓக.30

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களைப் பார்வையிடுவதற்காக ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமான செயலணித் தலைவர் மனோ தித்தவெல தலைமையில் 11 பேர் கொண்ட குழுவினர் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இவர்கள் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மீள்கட்டுமான வேலைகளைப் பார்வையிடுவதுடன், இவ்விடயம் தொடர்பான முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடுவர்.

இவர்கள் பங்குபற்றும் கலந்துரையாடல் யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஸ் தலைமையில், இன்று காலை யாழ்.செயலகத்தில் இடம்பெறும்.

காலை 9 மணிக்கு பிரதேச செயலர்கள், வங்கியாளர்களுக்கும் -

முற்பகல் 10.30 மணிக்கு அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், திணைக்களத் தலைவர்களுக்கும் இக்கலந்துரையாடல் நடத்தப்படும்.

இக்குழுவில் மனோ தித்தவெல, திருமதி ரோகினி நாணயக்கார, திருமதி ராசில் பெரேரா, ரமேஸ் செல்லையா, இந்திரா கே.ராஜபக்ச, தொசபால ஹெவகே, ஜி.அளுவத்தகம, எம்.விக்கிரம ஆராச்சி, டபிள்யூ எம்.டி.ஜே. பெர்னான்டோ, வை.கே.டி.சில்வா லயனல் பெர்னான்டோ ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

(3-204-203)

**செப்ரெம்பர் 01 இல்**
**உலகத் திசை எங்கும் எமது உணர்வுகள் ஒலிப்பதற்காய் ஒன்று கூடுவோம் கிளிநொச்சியில்**



# தேர்தல் பணிகளில் திணைக்களம் தீவிரம்

கொழும்பு, ஒக. 30

நாட்டின் ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டு நடத்துவதற்கான ஏற்பாடுகளில் தேர்தல் திணைக்களம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. கொழும்பு, ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் செயலகம் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

தேர்தல் திகதியை நிர்ணயிப்பது தொடர்பாகவும், ஏனைய ஏற்பாடுகள் பற்றியும் ஆராயும் உயர்மட்ட மாநாடு இன்று செவ்வாய்க் கிழமை காலை தேர்தல் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தலைமையில் நடைபெறவுள்ள இம் மாநாட்டிற்கு 22 தேர்தல் உதவி ஆணையாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். தேர்தல் செயலகத்தைச் சேர்ந்த ஏனைய உயர் அதிகாரிகளும் இம்மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாண மாவட்டங்களில் ஜனாதிபதித் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக இம்மாநாட்டின்போது விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் வசிக்கும் தமிழ் வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கு வசதியாக வழமைபோன்று இம்முறையும் கொத்தணி வாக்குச் சாவடிகளை நிறுவுவது தொடர்பாகவும் இன்றைய மாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளாக ஜே.ஆர் ஜயவர்தன, ரணசிங்க பிரேமதாஸ, டி.பி. விஜேய துங்க, சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் பதவி வகித்துள்ளனர்.

நாட்டின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது தெரிவு செய்யப்படவுள்ளார். டி.பி. விஜேய துங்க தேர்தல் மூலமாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படாது ஆர். பிரேமதாஸ படுகொலை செய்யப்பட்டதை அடுத்து அவரது இடத்துக்கு நியமிக்கப்பட்டார்.

இந்தவகையில், ஜே.ஆர். ஜயவர்தன, ரணசிங்க பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க ஆகிய மூன்று பேரே மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிகளாவர். இதில் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா இரண்டு தடவைகள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர். அதனால், மூன்றாவது தடவை அவரால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-க)

## பிரதேச செயலகத்திற்கான கட்டடம் 14 இல் திறப்பு

தென்மராட்சி, ஒக.30

சாவகச்சேரியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் தென்மராட்சிப் பிரதேச செயலக இருமாடிக்கட்டடம் அடுத்தமாதம் 14ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு அவசர புனர்வாழ்வுத் திட்ட (நீர்ப்) நிறுவனத்தினால் ஒருகோடி 60 லட்சம் ரூபா செலவில் இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தினை யாழ்.அரச அதிபர் க.கணேஸ் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்துவைப்பார்.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின் போது பிரதேச செயலகக் கட்டடம் குண்டு வீச்சுக்களால் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

2002ஆம் ஆண்டு தொடக்கம் தனியார் கட்டடங்களில் பிரதேச செயலகம் இயங்குவது தெரிந்ததே. (3-117)

# புரிந்துணர்வு ஒப்பந்தம், சமாதான முயற்சி; இரண்டிலும் பிரதமர் தொடர்ந்து மௌனம்

## குற்றஞ்சாட்டுகிறார் ஐ.தே.க. பிரதிப் பொதுச் செயலர்

கொழும்பு, ஒக.30

போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்தும் அமைதி முயற்சிகள் குறித்தும், தனது நிலைப்பாட்டை வெளிப்படையாகத் தெரிவிக்காமல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்து மௌனத்தைக் கடைப்பிடித்து வருகிறார் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்துள்ளார். புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அரசு தொடர்ந்து பேணவேண்டும் என்றும் - அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதித் தேர்தலொன்று விரைவில் நடக்கவுள்ள இச்சந்தர்ப்பத்தில், போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மிகமுக்கியமானதேவை. எனவே, இப்போது அது குறித்து அரசு கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் பொறுப்பு புதிய ஜனாதிபதியைச் சார்ந்தது. எனவே, போர்நிறுத்த ஒப்பந்தத்தைப் பேணிப் பாதுகாத்து முன்னெடுப்பது குறித்து அரசு உடனடிக் கவனம் செலுத்தவேண்டும்.

டோக்கியோ பிரகடனம், ஒஸ்லோ தீர்மானம் என்பவற்றின் அடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து இனங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பேச்சுகள் மூலமான அரசியல் தீர்வு ஒன்றைக்காண ஐ.தே.க. உறுதிபூண்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானவுடன் புதிய உத்வேகத்தில் அமைதி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு அதனூடாக நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படும்.

ஆனால், இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்ந்தும் மௌனம் சாதிக்கிறார்.

- இவ்வாறு அந்த அறிக்யைில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-க)


## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### வீடும் காணியும் விற்பனைக்கு

ஊரெழுப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ஆறு பரப்புடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.பொன்னுத்துரை, K.K.S. றோட், இணுவில் கிழக்கு. (சிமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு அருகில்) T.P.: 077 6180694. (39333)

### வீடு வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, நல்லூரில் மாணவர்கள் தங்குவதற்கு வீடு வாடகைக்கு உண்டு. 30.8.2005 தொடக்கம் 4.9.2005 வரை தொடர்புகொள்ளலாம். S. கதிரமலை. T.P.:0776110812. (39450)

### விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.


# தரம்-9 மாகாணப் பொதுப் பரீட்சை நவம்பர் மாதம் நடைபெறும்

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் தரம்-9 மாணவர்களுக்கான மாகாண மட்டப் பொதுப்பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் தோற்றவுள்ள பாடங்கள் தொடர்பான விவரங்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் கேட்டுள்ளார்.

தாய்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, சுகாதாரம், சமயம், இரண்டாம் மொழி, அழகியல் ஆகிய ஒன்பது பாடங்களுக்காக இப்பரீட்சை நடத்தப்படவுள்ளது.

நவம்பர் மாதத்தில் தரம்-9 மாணவர்களுக்கு மாகாண மட்டத்தில் பொதுப்பரீட்சை நடத்தப்படுவதால் இம்மாணவர்களுக்கு பாடசாலை மட்டத்தில் மூன்றாம் தவணைப் பரீட்சை நடத்தப்படமாட்டாது.

மாகாண மட்ட பொதுப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையிலேயே மாணவர்களின் வகுப்பேற்றம் தீர்மானிக்கப்படவுள்ளது. பரீட்சைப் பெறுபேறுகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்படவுள்ளன.(எ-க)

## மாணவரிடையே போட்டிகள்

உள்ளூராட்சி வார நிகழ்வையொட்டி வலி. வடக்கு பிரதேச சபைப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்துவதற்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி எஸ்.மாணிக்கம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

இப்போட்டிகள் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் இதற்கான விண்ணப்பங்களை நாளைக்கு முன்னர் பாடசாலை மாணவர்கள் அதிபருக்கூடாக அனுப்பி வைக்குமாறும் கேட்டுள்ளார். (3-29)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



விண்ணில்: 31-07-2005

**அமரர் சின்னத்தம்பி ஆறுமுகம்**

31.07.2005 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரின் பிரிவறிந்து பல வகையிலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும், இறுதிக்கிரியையில் கலந்துகொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், மலர்வளையம் சாத்தியோருக்கும், தொலைபேசிமூலம் தொடர்புகொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இன்று (30.08.2005) செவ்வாய்க்கிழமை பகல் 11மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

நாவற்குழி.
(39448)(26-14-45)

ஆ.நவரத்தினம் (மின்சாரசபை),
ஆ.நடராசா (கிராம அலுவலர், நாவற்குழி).

## கண்ணீர் அஞ்சலி



**K.R.சிவலோகநாதன் விதுர்ஷன்**

எமது ஸ்தாபனத்தின் உரிமையாளராகிய திரு.கே.ஆர்.சிவலோகநாதனின் மைந்தன் விதுர்ஷன் அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலையடைவதோடு, அவரது இழப்பால் ஏக்கமும் துயரமும் அடைந்திருக்கும் அன்னாரது குடும்பத்தாருடன் துயர்பகிர்கின்றோம். அவரது ஆத்மா நிலையான அமைதி பெற எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

K.R.சிவலோகநாதன் அன்கோ (K.R.S.)
இல.6(96), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (39422)(26.14.45)

முகாமையாளரும் பணியாளர்களும்.

## STUDY IN SINGAPORE

WITH PART TIME JOB

All Diploma, Degree and English Programmes





Stirling school of Business
39 Stamford Road # 02-11
Stamford House
Singapore 178885
Tle # 6591955651

Contact now
M.Theepan
Jaffna.
0776594321

## எலக்ரோனிக் எரிவாயு சேமிப்புக்கருவி (GSK)



ISO தர விருதுபெற்ற GSK யாழ்ப்பாணத்தில் முதலாவதாக

ஒவ்வொரு சிலிண்டரிலிருந்தும் 50% முதல் 55% வரையான எரிவாயுவை சேமிக்க இக்கருவி வழிசெய்கிறது.

**இதன் பயன்கள்:**

- அதிவேக சமையல்
- பராமரிப்பு அவசியமில்லை
- சூழல் மாசடைவதைத் தடுக்கிறது

அத்துடன்

- குறைந்த கட்டணம்
- ஒருவருட உத்தரவாதம்
- உங்கள் வீடுகளுக்கு வந்து இக்கருவி இணைத்துத் தரப்படும்.

QUALITY ASSURED COMPANY ISO 9001 - 2000 CERTIFICATION

**S.M.S. WORLD**

291, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P.: 021-4590807, 0773139302, 0773 276339, 0777 915824.

அதிகரித்துவரும் எரிவாயுச் செலவிற்கான உடனடித் தீர்வு

(C/44849)(50)

## விவாகசோபன அழைப்பு

நல்லூர் சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்களின் பௌத்திரனும் சிவஸ்ரீ குமாரக் குருக்களின் ஜேஷ்ட புத்திரனுமாகிய

**சிவஸ்ரீ சௌ.சசிகுமார சர்மா (ரூபன்)**

அவர்களுக்கு

கல்வியங்காடு சிவஸ்ரீ சங்கரசபாபதி குருக்களின் பௌத்திரியும் பிரம்மஸ்ரீ வைத்தியநாத சர்மாவின் புத்திரியுமாகிய சௌபாக்கியவதி

**ஸ்ரீ கமலேஸ்வரியை**

ஸ்வஸ்திஸ்ரீ ஆவணி 15ஆம் நாள் 31.08.2005 புதன்கிழமை பகல் 11.28 மணிமுதல் 12 மணி வரை உள்ள சுபமுகூர்த்த வேளையில் நல்லூர் சட்டநாதர் கோயிலடி திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் மாங்கல்யதாரணம் நடைபெறவுள்ளதால் இருவீட்டாரின் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தங்கள் சுற்றஞ்சூழ பங்குபற்றி மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

சிவஸ்ரீ குமாரக் குருக்கள்,
நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்,
110/18, சட்டநாதர் கோயிலடி.
0776048302.

பிரம்மஸ்ரீ ச.வைத்தியநாதசர்மா,
கல்வியங்காடு,
நல்லூர்.

(39455)(42-14-45-26)

# பொல்லா வினைகளைப் போக்குவதற்கு பயன்பட்ட நயினை - நல்லூர் பாதயாத்திரை

**நல்லைக் கந்தனின் வருடாந்தத் தேர்த்திருவிழாவை முன்னிட்டு சப்த தீவக ஜீவன சங்கசமாசம் வருடம்தோறும் நயினா தீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் இருந்து நல்லூர் நோக்கி நடந்தும் பாதயாத்திரை நாளை புதன்கிழமை ஆரம்பமாகின்றது. இந்தப் பாதயாத்திரையின் மகிமை பற்றி விளக்குகின்றது இந்தக் கட்டுரை.**

தெய்வீகத் திருத்தலங்களிற்கு காலால் நடந்துசென்று வழிபடுதலே பாதயாத்திரையாகும். பலர் சேர்ந்து இறை நாமத்தை பாடிக் கொண்டு காலால் நடந்து தெய்வீகத் திருத்தலங்களைத் தரிசித்து வழிபடுவது பஜனைப் பாதயாத்திரையாகும்.

சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் மற்றும் அடியவர்கள் பாதத்தால் நடந்துசென்றுதான் பதிகம்பாடி பரவிப் பணிந்தார்கள். யாத்திரை என்பது தெய்வீக திருத்தலங்களைத் தரிசித்து ஆண்டவனை வழிபடுவதுதான். இதுவே யாத்திரை என்ற சொல்லிற்குள் பொதிந்துள்ள கருத்து.

ஆத்மீக நோக்கோடு சமய குரவர்களால், ஞானிகளால் மேற்கொள்ளப்பட்ட பாதயாத்திரை தெய்வீகத்தின் தன்மையையும், புனிதத்தையும் வெளிப்படுத்தியது.

நூறு ஆண்டுகளுக்கு முன் பாதயாத்திரையாகத்தான் மக்கள் ஆலய வழிபாட்டை மேற்கொண்டார்கள். கதிர்காமக் கந்தனைக்காண கதிரமலைக்குப் பாதயாத்திரையாகச் சென்று வழிபட்டார்கள். கதிர்காமக் கந்தனை கால் நடையாகச் சென்று வழிபட்ட அன்றைய காலத்தில் கதிர்காமத்தில் ஒரு ஆன்மீக உந்து சக்தி - தெய்வீகத்தின் வெளிப்பாடு அனைவராலும் உணரப்பட்டது.

'அரோகரா' என்ற சத்தத்தில் தெய்வீக சக்தி வெளிப்பட்டது. தெய்வீக, ஆனந்த பரவச நிலையில் அடியவர்கள் தன்னை மறந்து ஆடுகின்ற ஒரு தெய்வீகப் பரவச நிலை அன்று அங்கு நிலவியது. ஒரு தெய்வீகப் பூமியாகக் கதிர்காமம் காட்சி தந்தது. இன்று அந்த நிலைமாறிவிட்டது.

குடாநாட்டில் உள்ள ஆலயங்களிலும் பக்தி உணர்வோடு வழிபாடு செய்வது அருகிவருகின்றது. நல்லூர் கந்தன் ஆலயம் அமைந்துள்ள திருவீதி சித்தர்கள், முத்தர்கள் வாழ்ந்த திருவீதி. அவர்களின் திருப்பாதச் சுவடுகள் பதித்த திருவீதியை கொண்ட திருத்தலம் நல்லூர்.

'நல்லைக்கந்தன் குமரன் பேரை நான் நினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறப்பபேனடி கிளியே' 'நல்லூரான் தஞ்சமடி' என்று பாடிய சிவயோக சுவாமிகள் நல்லைப் பதிக்கு நேராய் நடந்துபோவோம். நாமெல்லாம் வாரீர் சீராய் என்று பகர்ந்த நற்சிந்தனைக்கமைய ஆரம்பிக்கப்பட்டதே நயினை- நல்லூர் திருத்தலப் பஜனைப் பாதயாத்திரை.

**சி.நா.கோபாலகிருஸ்ணன்**
**தலைவர்**
**சப்த தீவக ஜீவன் சங்க சமாசம்.**

நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இருந்து வேல் எடுத்துக்கொண்டு நாவால் அவன் பெயரைப்பாடிக் கொண்டு காலால் நடந்து செல்கின்ற பொழுது வேறு ஒன்றும் நமக்குத் தெரியாது.

அம்பாளின் திருத்தலத்தில் இருந்து வேல் எடுத்துவிட்டால் நம்மை அறியாத ஒரு தெய்வீக ஆனந்தப் பரவசநிலை வந்து கவ்விக்கொள்ளும். அதன்பின் நல்லூரான் வீதியை அடையும் வரை நடப்பதே தெரிவதில்லை.

1964ஆம் ஆண்டு கொழும்பில் இருந்து வந்துதான் இத்திருத்தலப் பஜனை பாதயாத்திரையை ஆத்ம யோக ஆசிரியர் நா.முத்தையாவும், ம.நமச்சிவாயமும் நாமும் ஆரம்பித்தோம். தென் இந்தியாவைச் சேர்ந்த சுப்பிரமணியபிள்ளை என்ற ஒரு அடியவர் கால்வாதத்தால் நடக்கச் சிரமப்பட்டவர். அவரும் இந்த யாத்திரையில் கலந்துகொண்டார்.

அந்த ஆண்டே அவரின் கால் வாதம் அகன்றது. அதன்பின் அவர் கொழும்பில் வசிக்கும்வரை வருடா வருடம் திருத்தல பஜனைப் பாத யாத்திரையில் வந்து கலந்துகொள்வார்.

'நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே நாட்டில் உள்ள பிணிகள் ஓடும்' என்று யோகர் சுவாமிகள் சொன்னவாறு ஆண்டுதோறும் உன்னைக்காண நடந்து வருகின்றோம். நல்லூர் ஆண்டவனே நன்மை கோடி அடைந்து வருகின்றோம்.

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.30

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி இளங்கலைஞர்மன்றம் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் 21 ஆம் நாளான இன்று செவ்வாய்க்கிழமை எல்.திலகநாயகம் போலின் பாட்டுக்கச்சேரி நடைபெறும்.

வயலின்-கே.பத்மநாதன், மிருதங்கம்- எஸ். துரைராசா, கெஞ்சிரா- கே.அனந்தகோபன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகப் பங்கேற்பர்.

(எ-204)


* * *

யாழ்ப்பாணம்,ஓக.30

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயமண்டப அரங்கில் கந்தபுராணம் என்னும் பொருளில், கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு சிங்கமுகாசூரன் என்னும் பொருளில் உரையாற்றுவார்.

(எ-204)




வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலய பார்த்திப வருட பெருந்திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் 11 ஆம் திகதி திருக்கல்யாணமும் நடைபெறும்.(எ-203)

* * *

காரைநகர்,ஓக.30

தங்கோடை அறுகம்புலம் நாக பூஷணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்றுமுன் தினம் ஆரம்பமாகியது திருவிழாக் காலங்களில் மூத்த சமய விரிவுரையாளர் சபாரத்தின ஈஸ்வரசர்மா 'மண்ணில் நல்லவண்ணம்' வாழலாம் என்ற பொருளில் தொடர் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தி வருகிறார்.

வட்டக்கச்சி,ஓக.30

கிளிநொச்சி இராமநாதபுரம் அருள்மிகு நந்தவனப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 27ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 5ஆம் திகதி சங்காபிசேகமும் அதனைத் தொடர்ந்து தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று திருவிழா நிறைவடையும்.(எ-405-203)

* * *

தென்மராட்சி,ஓக.30

மந்துவில் புளியந்திடல் கந்தசாமி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பஞ்சகுண்ட மகாகும்பாபிசேகம் எதிர்வரும் 9ஆம் திகதி காலை 6.34 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் எதிர்வரும் 5ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகும் 8ஆம் திகதி காலை 8மணி தொடக்கம் அடியார்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துவர்.

(எ-117-203)

* * *

சுழிபுரம்,ஓக.30

சுழிபுரம் மேற்கு ஐயனார் ஆலய வருடாந்த அலங்காரத்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் பகல் அபிசேக ஆராதனைகள் நடைபெற்று அன்னதானம் வழங்கப்படும்.

திருவிழா நாள்களில் தினமும் 'மகாபாரதம்' என்னும் தலைப்பில் ஆசிரியர் இரா.செல்வவடிவேல் தொடர்சொற்பொழிவாற்றுவார்.

(எ-28-203)

* * *

சுழிபுரம்,ஓக.30

தொல்புரம் கிழக்கு மடத்துப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 7ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

திருவிழாக்காலங்களில் தினமும் கூட்டுவழிபாடு, சமயச் சொற்பொழிவு என்பன இடம்பெறும்.

(எ-28-203)

* * *

நல்லூர், ஓக.30

வேலணை மண்கும்பான் வெள்ளைப்புற்றடி வீரகத்தி விநாயகர் ஆலய நவகுண்டபதி அஷ்டபந்தன புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிசேகம் நாளை புதன்கிழமை காலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் அருளுரையை ஆலயத்தலைமைக்குருவும், ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் வழங்குவர்.

கிரியா நிகழ்வுகளைத் தொடர்ந்து மகேஸ்வரபூசையும் இடம்பெறும்.

(எ-111-203)




## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்



இருபத்தொராம் நாள் திருவிழா
தங்கரதம்

## மனிதரெல்லாம் கூடிக்கொண்டார்



சண்பக மரத்தடியிற் - கிளியே!
சாதுக்களின் கூட்டமடி
மண்போட்டால் மண்விழாதே - கிளியே!
மனிதரெல்லாங் கூடிக்கொண்டார்.

- யோகர் சுவாமிகள்.

## நல்லூர்க் கந்தனை நாளும் தொழுதிடு

இராகம்- சண்முகப்பிரியா தாளம்- ஆதி

பல்லவி

நல்லூர்க் கந்தனை நாளும் தொழுதிடு
வல்வினை தீர்ந்துவிடும் சரவணபவகுக (2ஆம் காலம்)
(நல்லூர்)

அனுபல்லவி

எல்லையில்லாக் கருணை எழில் வடிவேலன்
என்றும் எம்மைக் காக்கும் சிவன்உமை பாலன்
(நல்லூர்)

சரணம்

பைந்தமிழ் மலர் பாமாலை சூடி உன்
பாதமலர்களைப் பணிந்திட அருள்வாய்
செந்தமிழ் செல்வா திருமால் மருகா
எங்களைக் காத்திட எழுந்தோடி வாவா
(நல்லூர்)

திருமதி ம.நவரத்தினம் கொக்குவில்.

## சூழும் பகை போக்கிடய்யா!

நல்லையில் சரண்புகுந்தோம்- உன்
திருவடியில் தஞ்சம்மென்றோம்
தொல்லையகற்றிடவே பணிகின்றோம்
மாண்டுவிட்ட சமாதானம் - இனி
மீண்டெழ வரந்தருவாய்-வேலனே
நாளும் தொழுகின்றோம்
சூழும் பகை போக்கிடய்யா
வேலுடன் நீ வந்து எம்
வேதனை வேரறுத்திடய்யா
மயிலேறி நீ வந்து எந்தன்
மகிழ்வான வாழ்விற்கு வழி காட்டிடய்யா

எஸ்.கவிதரன்.

## தாமதம் செய்வதேனோ?

தாமதம் செய்வதேனோ என்னை யடைய
மாமயில் ஏறிடும் மால் மருகா முருகா
(தாம)

வருவாய் நீயென்று வழிபார்த்தே ஏங்கி நின்றேன்
தருவாய் உன்திருக் கரம் நான்பற்றி மகிழ்ந்திடவே
(தாம)

மாதுமை மகனே வரதா தயாகரனே
மாதெனை வருத்தி மையலால் வாட்டுகிறாய்
காதெனும் வழியால் விழிநீர் வழிந்தோட
ஏதெனை சேராது நிற்கிறாய் இரு நிலையாய்
(தாம)

அன்பரிடம் சேர்ந்து அணைந்து அருள்சுரப்பாய்
துன்பமிடி அகற்றி நற்றிலை அளித்திடுவாய்
தன்னிலை தளர்ந்த தமியேன் நிலையறிந்து
இன்னுமேன் தாமதம் என்னுடன் கூடிட
(தாம)

தும்பளையூர் நா.வரதராசா

## நல்வாழ்வு தருவாய்!

"சொல்லொணாத் துயருற்று நாம்
சிதறுண்டு பரந்து தேசமெல்லாம் ஓடி
உனைப்போல் ஆண்டிக் கோலம் கொண்டு
அலைந்த வேளைதனில் முருகா உன் வேலை நாடியன்றே
ஓடோடிவந்தோம்
என்ன நினைப்பதனை நீகொண்டாயோ
புன்முறுவல்காட்டி தோகைமயிலேறி
வீதி உலா வருகின்றாய் தேவியருடன்
இன்றும் நம்பி உனை நாடி வந்தோம்
தந்திடு வளமான வாழ்வதனை கந்தா நீ"

நயினை விஜயன்

உ
யாழ்.கோயிலாக்கண்டி - மருதடி

**அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்**

**ஜீர்ணோர்தாரண அஸ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

கர்மாரம்பம் நேற்று (29.08.2005) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடைபெற்றது.

*எண்ணெய்க்காப்பு இன்று (30.08.2005) செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை.*

*நாளை (31.08.2005) புதன்கிழமை காலை 6.05 மணி முதல் 07.10 மணி வரையுள்ள சிங்க லக்கின சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.*

**அடியார்கள் விழாக்காலங்களில் அபிஷேக திரவியங்களைக் கொடுத்து,தரிசித்து விநாயகர் அருளைப் பெறுக.**

பிரதிஸ்டா பிரதமகுரு
பிரம்மஸ்ரீ தியாகசத்திதரகுருக்கள்
(நாவற்குழி) (39438) (32-14) **-தேவஸ்தானம்.**



**திருமணக் கார்** (குளிரூட்டியது)

**வாடகைக்கு**

+ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
+ விசேட வைபவங்கள் + சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட] குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.



T.P.: 0777 - 903090,
077-3086939,
0777-246117,
077-6018467. (38657)

தொடர்பு: நடனம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



**கண்ணீர் அஞ்சலி**

*யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் படிப்பு கலைமாணி இறுதி ஆண்டு மாணவியும் எமது சகபாடியும் ஆன சிவமங்களாவின் அன்புத் தந்தை*

**வேலுப்பிள்ளை தியாகலிங்கம்**

*அவர்களது திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆறுதலையும், அனுதாபத்தையும் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

கலைமாணி இறுதியாண்டு மாணவர்கள்,
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
(39438) (39-32-14)



FOR SALE
Panasonic LCD Projector model No:
PT AE 700E 100 - 240 V 2.2 - 1.1A50/60Hz.
தொடர்பு:
37, கச்சேரி நல்லூர் வீதி,
(39439)(32-14) யாழ்ப்பாணம். T.P : 2429



S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

**தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே கேட்டு வாங்குங்கள்**




**எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்த தவறாதீர்கள்**

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீரக்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-Lon
என்றும் முன்னணியில்

S-Lon இல்லம்
நிம்மதியான வாழ்வுக்கு

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுருக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 ∴பெக்ஸ்: 5352741


## சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக.30

யாழ்.பல்கலைக்கழக அனைத்து விடுதிகள் மாணவர் ஒன்றியத்தினால் எதிர்வரும் 3 ஆம் திகதி நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என ஒன்றியத்தின் செயலாளர் வி.சார்லினி தெரிவித்தார்.

ச/ 5491 திருமதி. தங்கரத்தினம் புண்ணியமூர்த்தி
ச/ 5497 திரு. செல்லையா சிதம்பரப்பிள்ளை
ச/ 5501 திருமதி. மீனாம்பாள் கந்தையா
ச/ 5503 திரு. வேலுப்பிள்ளை துரைராஜா
ச/ 5504 திரு. காத்திகேசு கனகரத்தினம்
ச/ 5506 செல்வி. பரமேஸ்வரி சிவப்பிரகாசம்
ச/ 5515 திரு. விசுவலிங்கம் தர்மராஜா
ச/ 5527 திரு. கந்தையா பாலசுப்பிரமணியம்
ச/ 5528 திருமதி. பொன்னாபாணம் பஞ்சாட்சரம்
ச/ 5535 திரு. சுப்பையா இராசரத்தினம்
ச/ 5538 திரு. கந்தர் ஆறுமுகம்
ச/ 5540 திரு. நாகமுத்து செல்லப்பா
ச/ 5554 திரு. அப்புக்குட்டி இராசையா
ச/ 5557 திரு. சின்னத்தம்பி சிவஞானம்
ச/ 5560 திருமதி. பொன்னம்மா சின்னத்தம்பி
ச/ 5561 திருமதி. பரவையார் நவரட்ணம்
ச/ 5566 திரு. செல்லத்துரை இரத்தினசிங்கம்
ச/ 5569 திருமதி. தையல்நாயகி நடராசா
ச/ 5570 திரு. சோமசுந்தரம் சிவபாதம்
ச/ 5583 திரு. வேலுப்பிள்ளை சட்டநாதபிள்ளை
ச/ 5595 திருமதி. அன்னம்மா சிவசுப்பிரமணியம்
ச/ 5606 திரு. தம்பு செல்வநாயகம்
ச/ 5617 திருமதி. தங்கமுத்து பொன்னம்பலம்
ச/ 5627 திருமதி. சரஸ்வதி தியாகராசா
ச/ 5630 திரு. கந்தப்பு துரையப்பா
ச/ 5642 திருமதி. சிவகாமசுந்தரி எதிர்வீரசிங்கம்
ச/ 5643 திரு. செல்லப்பா குணரத்தினம்
ச/ 5646 திரு. கந்தையா சுந்தரம்பிள்ளை
ச/ 5649 திருமதி. சரஸ்வதி தெய்வேந்திரம்பிள்ளை
ச/ 5660 திருமதி. செல்லம்மா கந்தையா
ச/ 5670 திருமதி. அன்னப்பிள்ளை கந்தையா
ச/ 5673 திருமதி. மகேஸ்வரி துரைராசா
ச/ 5674 திரு. அப்புப்பிள்ளை தேவராசா
ச/ 5686 திரு. நமசிவாயம் சிவரத்தினம்
ச/ 5705 திரு. கந்தர் மார்க்கண்டு
ச/ 5717 திரு. இராமலிங்கம் சின்னத்துரை
ச/ 5726 திரு. சின்னப்பு செல்வதுரை
ச/ 5730 திரு. நாகேசு திருநாவுக்கரசு
ச/ 5731 திரு. பாலரத்தினம் தருமலிங்கம்
ச/ 5732 திருமதி. பாறுவதி அருமைநாயகம்
ச/ 5735 திரு. செல்லன் கந்தசாமி
ச/ 5751 திருமதி. பாக்கியம் கந்தசாமி
ச/ 5755 திரு. கந்தையா வெள்ளியம்பலம்
ச/ 5757 திருமதி. தெய்வானைப்பிள்ளை கந்தசாமி
ச/ 5762 திருமதி. செல்லம்மா வடிவேலு
ச/ 5779 திருமதி. தங்கசோதி சந்திரசிங்கம்
ச/ 5784 திருமதி. திலகவதி விஸ்வரத்தினம்
ச/ 5789 திரு. கதிர்காமா தெய்வேந்திரசிங்கம்
ச/ 5793 திருமதி. இராசம்மா தங்கராசா
ச/ 5814 திரு. நாகமுத்து வயிரமுத்து
ச/ 5823 திரு. கந்தர் இராமலிங்கம் கந்தையா
ச/ 5825 திருமதி. நாகம்மா காசி
ச/ 5829 திரு. கந்தையா தில்லையம்பலம்
ச/ 5830 திருமதி. இரத்தினம் நாகலிங்கம்
ச/ 5833 திருமதி. சிவனேஸ்வரி கணபதிப்பிள்ளை
ச/ 5836 திரு. கந்தையா சுப்பிரமணியம்
ச/ 5858 திரு. முத்தையா தணிகாசலம்
ச/ 5863 திரு. இராசையா தம்பிராசா
ச/ 5869 செல்வி. மங்களேஸ்வரி பரஞ்சோதி
ச/ 5877 திரு. இராமலிங்கம் சிவகுரு
ச/ 5884 திரு. வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை
ச/ 5889 திருமதி. தங்கம்மா சுப்பிரமணியம்
ச/ 5893 திரு. சின்னாச்சி மார்க்கண்டு
ச/ 5895 திருமதி. இராசமணி சின்னையா
ச/ 5896 திரு. குமாரசாமி குலநாதன்
ச/ 5899 திரு. குமாரவேலு சீவரத்தினம்
ச/ 5909 திருமதி. மாருதப்புரவல்லி குமாரசாமி
ச/ 5915 திருமதி. சிவக்கொழுந்து பாலசுப்பிரமணியம்
ச/ 5917 திரு. முத்தையா இராசலிங்கம்
ச/ 5927 திருமதி. நாகரத்தினம் குமார்
ச/ 5931 திரு. இராமலிங்கம் செல்லத்துரை
ச/ 5941 திருமதி. பாக்கியம் சொக்கலிங்கம்
ச/ 5945 திரு. வேலுப்பிள்ளை பொன்னையா

ச/ 5958 திரு. கந்தையா செல்லத்துரை
ச/ 5979 செல்வி. பூரணம் ஆனைவீரசிங்கம்
ச/ 5984 திருமதி. அன்னபூபதி சிவப்பிரகாசம்
ச/ 5995 திருமதி. பொன்னம்மா சிவசுப்பிரமணியம்
ச/ 6010 திருமதி. சின்னப்பிள்ளை முருகேசு
ச/ 6016 திரு. சின்னப்பொடி நடராசா
ச/ 6018 திரு. சின்னத்தம்பி கனகரத்தினம்
ச/ 6044 திரு. கிஸ்ணபிள்ளை தேவலிங்கம்
ச/ 6045 திரு. அப்புக்குட்டி மார்க்கண்டபிள்ளை
ச/ 6047 திரு. மயில்வாகனம் பாலசுந்தரனம்
ச/ 6051 திருமதி. தேவாமிர்தம் சின்னுப்பு
ச/ 6053 திரு. ஏகாம்பரநாகேஸ்வரன்ஐயர் சோமசுந்தரஐயர்
ச/ 6054 திரு. கணபதிப்பிள்ளை கதிரவேலு
ச/ 6056 திரு. கந்தையா துரைச்சாமி
ச/ 6057 திருமதி. சரசுவதி வரதராசா
ச/ 6062 திரு. அருணாசலம் சுப்பிரமணியம்
ச/ 6069 திருமதி. நாகம்மா முத்தையா
ச/ 6077 திரு. நவரத்தினம் மகாசுந்தரம்
ச/ 6081 திரு. மயில்வாகனம் நாகலிங்கம்
ச/ 6082 திரு. கந்தையா குமாரசாமி
ச/ 6094 திருமதி. செல்வராணி துரைசிங்கம்
ச/ 6100 திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி
ச/ 6108 திரு. கணவதிப்பிள்ளை கந்தசாமி
ச/ 6109 திரு. வயிரு கந்தையா
ச/ 6118 திரு. மயில்வாகனம் பாலசந்திரன்
ச/ 6126 திரு. சபாபதிப்பிள்ளை தியாகராசா
ச/ 6130 திரு. செல்லலத்துரை சந்திரசேகரம்பிள்ளை
ச/ 6132 திரு. இராசையா செல்லத்துரை
ச/ 6136 திரு. வடிவேலு பொன்னுச்சாமி
ச/ 6138 திரு. மருதப்பு அரியரத்தினம்
ச/ 6148 திரு. முருகன் கணபதி
ச/ 6152 திரு. அப்புக்குட்டி அன்னலிங்கம்
ச/ 6168 திரு. சண்முகம் வைத்தீஸ்வரன்
ச/ 6174 திரு. கணபதிப்பிள்ளை முத்தையா
ச/ 6183 திரு. ஐயாத்துரை ஞானவேல்ராசா
ச/ 6188 திரு. வேலுப்பிள்ளை பண்டாரபிள்ளை
ச/ 6189 திருமதி. தங்கமயில் சோமசுந்தரம்
ச/ 6191 திருமதி. சின்னம்மா பூவிலிங்கம்
ச/ 6193 திருமதி. அன்னலட்சுமி கணபதிப்பிள்ளை
ச/ 6196 திரு. சரவணை அருச்சுனன்
ச/ 6198 திரு. மாரிமுத்து சின்னத்துரை
ச/ 6237 திரு. கணபதிப்பிள்ளை இராமநாதன்
ச/ 6242 திரு. செல்லப்பா பொன்னையா
ச/ 6243 திரு. கந்தையா சிவப்பிள்ளை
ச/ 6245 திரு. குமாரு ஆறுமுகம்
ச/ 6248 திருமதி. பொன்மலர் ஆனந்தம்
ச/ 6266 திருமதி. மாரிமுத்து வேலுப்பிள்ளை
ச/ 6287 திரு. கிருஸ்ணர் சிவலிங்கம்
ச/ 6289 திருமதி. யோகராணி குமாரசாமி
ச/ 6292 திரு. கணபதிப்பிள்ளை அம்பலவாணர்
ச/ 6299 திரு. மாணிக்கம் சந்தராதித்தர்
ச/ 6306 திரு. சின்னையா மகேந்திரன்
ச/ 6326 திரு. கந்தையா திருநாவுக்கரசு
ச/ 6341 திரு. இராமு ஆசை
ச/ 6367 திருமதி. செல்வநாயகி ஆனந்ததேவன்
ச/ 6368 திரு. செல்லத்துரை கனகரத்தினம்
ச/ 6374 திருமதி. இராசம்மா முத்துக்குமாரு
ச/ 6378 திருமதி. சிவபாக்கியம் தில்லையம்பலம்
ச/ 6389 திரு. வடிவேலு கதிர்காமு
ச/ 6393 திரு. மார்க்கண்டு நவரத்தினம்
ச/ 6416 திருமதி. சின்னத்தங்கம் கதிரேசு
ச/ 6418 திருமதி. செல்வநாயகம் குமாரசாமி
ச/ 6436 திரு. மூத்தவன் கந்தையா
ச/ 6459 திரு. காசிப்பிள்ளை இரத்தினசிங்கம்
ச/ 6461 திருமதி. தனலட்சுமி தம்பிஜயா
ச/ 6465 திரு. கந்தையா எதிர்மனசிங்கம்
ச/ 6484 திருமதி. பூரணம் தாமோதரம்பிள்ளை
ச/ 6486 திரு. சின்னப்பு திருநாவுக்கரசு
ச/ 6489 திரு. நாகேசு கந்தசாமி
ச/ 6496 திருமதி. பரமேஸ்வரி பொன்னுத்துரை
ச/ 6509 திருமதி. சிவாம்பிகை அருணாசலம்
ச/ 6527 திருமதி. மீனாட்சியம்மாள் சபாரத்தினம்
ச/ 6535 திரு. மாரிமுத்து திருஞானசம்பந்தன்
ச/ 6539 திரு. பொன்னையா பரமானந்தம்
ச/ 6548 திரு. வேலுப்பிள்ளை சபாபதிப்பிள்ளை
ச/ 6550 திருமதி. தனலட்சுமி இராஜரட்ணம்
ச/ 6559 திருமதி. அன்னலட்சுமி குணரத்தினம்
ச/ 6561 திரு. கந்தையா நடராசா
ச/ 6562 திரு. கனகா இராசதுரை
ச/ 6571 திரு. நாராயணசாமி கிருஷ்ணசாமி
ச/ 6582 திரு. தம்பியப்பா கதிரவேற்பிள்ளை
ச/ 6590 திரு. கிருஷ்ணன் வேலன்
ச/ 6594 திரு. சிவக்கொழுந்து சின்னத்தம்பி
ச/ 6615 திரு. செல்லையா கந்தையா
ச/ 6617 திருமதி. கனகம்மா கந்தசாமி
ச/ 6650 திரு. நடராசா ஆறுமுகம்
ச/ 6668 திருமதி. செல்வமலர் இராசையா
ச/ 6681 திருமதி. அருந்தவசுஸ்வரி யோகநாதன்
ச/ 6689 திருமதி. அருந்தவம் துரைராசா
ச/ 6692 திரு. நாகப்பர் தாமோதரம்பிள்ளை
ச/ 6694 திருமதி. புவனேஸ்வரி வடுகநாதர்
ச/ 6702 திரு. நல்லதம்பி சிவசுப்பிரமணியம்
ச/ 6724 திரு. செல்லப்பா லோகநாதன்
ச/ 6726 திரு. முருகன் செல்லையா
ச/ 6727 திருமதி. பொன்னம்மா பாலசுப்பிரமணியம்
ச/ 6732 திரு. முத்துச்சாமி நாகராசா
ச/ 6736 திரு. கணபதிப்பிள்ளை செல்வரத்தினம்
ச/ 6745 திரு. பொன்னன் ஐயாத்துரை
ச/ 6749 திரு. கணபதி கந்தையா
ச/ 6751 திருமதி. மகேஸ்வரி முருகேசு
ச/ 6776 திரு. கணபதி கந்தையா
ச/ 6798 திரு. சுந்தரம்பிள்ளை கதிரவேலு
ச/ 6799 திருமதி. இராசம்மா சின்னத்துரை
ச/ 6806 திரு. பொன்னம்பலம் கந்தசாமி
ச/ 6810 திருமதி. சரஸ்வதி நல்லையா

(வளரும்)

# நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கு தூவல் நீர்ப்பாசன முறையே சிறந்தது

## யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் கூறுகிறார்



யாழ்ப்பாணம்,ஓக.30

தூவல் நீர்ப்பாசன முறையைப் பின்பற்றுவதன் மூலம் விவசாயச் செய்கையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நிவர்த்திசெய்ய முடியும்.

இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் (UNDP) நிதி உதவியுடன் தூவல் நீர்ப்பாசன அறிமுக விழாவும் அதன் பயன்பாடு தொடர்பான ஆய்வுக் கருத்தரங்கும் அண்மையில் கமநல அபிவிருத்தித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

உதவி அரச அதிபர் ஆ.சிவசுவாமி மேலும் பேசும்போது தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்ட விவசாயிகளைப் பொறுத்த வரையில் இந்த நீர்ப்பாசன முறை மிகவும் அவசியமானது. கோடை காலங்களில் இம்மாவட்டத்தில் நீர் வற்றிப்போகும் நிலை ஏற்படுவதால் நீரைப் பாதுகாப்பது அவசியம். எனவே நீரைச் சிக்கனமாகப் பாவிப்பதற்கு இப்பொறிமுறை சிறந்த பயனை அளிக்கும். இம்மாவட்டத்தில் மீளவும் விவசாயச் செய்கையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நிவர்த்திசெய்து புனரமைப்பு செய்ய வேண்டிய கால கட்டத்தில் இந்நீர்ப்பாசனப் பொறிமுறையை ஏற்படுத்யிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது என்றார்.

நிகழ்விற்குத் தலைமைவகித்த உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது: வெள்ள நீரைத் தேக்கி நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்காக மாவட்டத்தில் பல குளங்களை அமைத்து சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அமுல்படுத்திவரும் எமது திணைக்களம்,தற்போது தூவல் நீர்ப்பாசனத்தை அறிமுகம் செய்து வைக்கிறது. இதன்மூலம் சிக்கனமான நீர்ப்பாவனையால் நீர் விரயத்தைத் தவிர்ப்பதோடு பயிர்களுக்கு ஏற்படும் நோய்த் தாக்கம், விவசாயக் கூலி ஆள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு ஆகியவற்றையும் கட்டுப்படுத் தவும் இந்தத் தூவல் நீர்ப்பாசன முறை பெரிதும் உதவுகிறது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக 90 பயனாளிகளுக்கு 50% மானிய அடிப்படையில் இத்தூவல் நீர்ப்பாசனப் பொறிகளைப் பொருத்தியுள்ளோம் - என்றார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் திருமதி ஞா.சிவபாதசுந்தரம் தமது கருத்துரையில்,

இந்த மாவட்டத்தின் விவசாயத்துறையை முன்னேற்றும் முகமாகவே தூவல் நீர்ப்பாசன முறையை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

எமது நிறுவனம் இத்திட்டத்துடன் மட்டும் நின்றுவிடாது. சகல கமநல சேவைகள் நிலையங்களுக்கு சூடடிக்கும் இயந்திரம், அரிவிவெட்டும் இயந்திரங்களையும் வழங்குவதோடு பழுதடைந்த உரக் களஞ்சியங்களை திருத்தி அமைப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எமது சேவைகளுக்கு சகலரதும் ஒத்துழைப்பும் தேவை - எனக் கூறினார்.

அடுத்துப் பேசிய விவசாய பீடாதிபதி பேராசிரியர் சு.இராசதுரை:-

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை விவசாய அபிவிருத்தியை அவதானிக்கும் போது நிலைபேறான அபிவிருத்தியை இந்த நீர்ப்பாசனப் பொறிமுறை மூலம் உருவாக்கக் கூடியதாக உள்ளது.

இயற்கையாக எமக்கு இருக்கும் நிலத்தடி நீர் இத்திட்டத்தின் மூலம் வீண் விரயமாவதைத் தடுக்கும். கூடிய நீர்ப்பாவனையால் விவசாயிகளால் பாவிக்கப்படும் உரம் நீருடன் கழுவப்பட்டு மண்ணுக்குள் சென்று நீரை மாசுபடுத்துகிறது. இந்தத் தூவல் நீர்ப்பாசனம் அதனைத் தடைசெய்கிறது. அரச சார்பற்ற நிறுவனங்கள் எமது விவசாயிகளுக்கு வழியைக்காட்டவேண்டும். அவர்கள் தமது காலில் நிற்கக் கூடிய திட்டங்களை நிறைவேற்ற வழிகாட்டவேண்டும். இதற்கு விவசாயபீடம் உந்து சக்தியாகத் துணை நிற்கும் - எனக் குறிப்பிட்டார்.

பொருளியல் பேராசிரியர் எஸ்.நித்தியானந்தன் பேசுகையில்:-

எமது மண் பயன்பாடு என்பதை நோக்கும் போது செழிப்பான நிலங்கள் யாவும் பொருளியலான பயன்பாட்டுக்குட்படுத்தப்படாது தரிசு நிலங்களாகக் காணப்படுகிறது.

இதற்கான முக்கிய காரணம் எங்களிடம் இவற்றைப் பயன்படுத்துவதற்குரிய கீழ்க் கட்டுமான வசதிகள் இல்லை.

இலகுவாக, எளிதாகப் பயன்படுத்தக் கூடிய வளங்களைக் கூடுதலாக நாம் பயன்படுத்துவதால் அவ்வளம் தீர்ந்து போகிறது. இதனால் விவசாயத்தை நவீன மயப்படுத்த வேண்டும். தொழில்நுட்ப ரீதியாக முன்னேற்றங்களை உள்வாங்க வேண்டும். பயன்படுத்தாத நிலங்களைப் பயன்படுத்தக் கூடிய நிலைக்கு மாற்ற வேண்டும் - என்றார்.

புவியியற் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை தமது கருத்துரையில் -

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் விவசாய நிலம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகிறது. விவசாய நிலம் குடியிருப்புகளாக மாறிவருவதே அதற்குக் காரணம். தற்போது விவசாயம் செய்ய 25 ஆயிரம் ஏக்கர் நெல்வயல் காணி பள்ளக்காணியாக இருக்கிறது. இத்தூவல் நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் இக்காணியில் இரண்டாவது முறை பயிர் செய்ய முடியுமா என்பதைச் சிந்திக்க வேண்டும் என்றார் .

விவசாய திணைக்கள ஆராய்ச்சி உதவிப் பணிப்பாளர் திருமதி செ.விஜயரட்ணம், தூவல் நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப்பாசனம் ஆகிய இரண்டிலும் தூவல் நீர்ப்பாசனத் தினால் தாவரவளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்படும். பூச்சித்தாக்கம் குறைய வாய்ப்புள்ளது. மண்ணின் தன்மை, அதன் கட்டமைப்பு, வினைத்திறன், மண்ணின் ஈரத்தன்மையின் அளவு ஆகியனவும் ஆராய்ச்சி செய்யப் பட்டுத் தரமுடியும் - என்றார்.

(ப-204)

# நுட்பமான விடயங்களைக் கொண்டு சமூகநோக்கோடு படங்களைத் தயாரிக்கவேண்டும்

புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களால் தயாரிக்கப்படும் சினிமா, இலங்கைத் தமிழ் சினிமாவுக்கு மீண்டும் பலமாக இடப்படும் அத்திவாரமாகும். உலகெங்கும் பரந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஈழத்தமிழர்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பறைசாற்றும் பிரதான ஊடகமாகத் திரைப்படமே எதிர்காலத்தில் விளங்கப் போகின்றது. எனவே அது மிகவும் நுட்பமாகப் பல விடயங்களையும் கவனத்திற்கொண்டு சமூக நோக்கோடு தயாரிக்கப்படவேண்டிய தேவை இருக்கின்றது.

'சலனசித்திரம்' அமைப்பின் யாழ். மாவட்ட பொதுச்செயலாளர் எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திவ்வியராஜனின் இசை, பாடல், கதை இயக்கத்திலான 'சகா' திரைப்படக் காட்சியின் அறிமுக நிகழ்வு அண்மையில் யாழ். மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. சலனசித்திரத்தின் செயலாளர் தொடர்ந்து கூறியதாவது:-

பலம் பொருந்திய ஊடகமான சினிமாவை மிகவும் அவதானமாகக் கையாள வேண்டிய பொறுப்பு இயக்குநர்களுக்கு உண்டு. சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய காட்சிகளை இயன்றளவு குறைத்து நன்மை பயக்கும் முற்போக்கான செய்திகளை வழங்கவேண்டும். திரைப்படங்களில் புகைத்தல், மதுப்பாவனைக் காட்சிகளைத் தடை செய்யும் சட்டமூலத்தை இந்திய அரசு நிறைவேற்றியிருக்கின்றது. இந்த முன்னுதாரணத்தைப் புலம்பெயர் தமிழ் சினிமா இயக்குநர்களும் பின்பற்றவேண்டும்.

இன்றைய இளஞ்சந்ததி சினிமாவில் வரும் தீய செய்திகளைப் பெருமளவு உள்வாங்கி வெளிப்படுத்துவதையே நாம் கண்டு கொண்டிருக்கின்றோம். எனவே தென்னிந்திய வர்த்தக தமிழ் சினிமா விட்டுக் கொண்டிருக்கும் தவறுகளை ஈழத்தமிழ் சினிமா சுட்டிக்காட்டி நன்னோக்கோடு புதிய வரலாறு படைக்கும்படியாக இயக்கப்பட வேண்டும்.

தென்னிந்திய தமிழ்ப்படங்கள் ஈழத் தமிழ் மண்ணில் பாரிய கலாசார மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. மேலைத்தேசப் பண்பாட்டின் வாய்க்கால்களாக இவை விளங்குகின்றன. இவை குறுகிய காலத்தில் ஏற்படுத்திய தாக்கம். இன்னும் பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்துகொண்டு தானிருக்கப்போகின்றது. இவ்வாறான நிலைமை களை உடைத்தெறிய புலம்பெயர் தமிழ் மக்கள் எமது மண்ணுக்கு ஏற்றதான படைப்புகளைத் தரவேண்டும். அதேவேளை, நம்மவர்களும் புலம்பெயர் படைப்புகளுக்குத் தமது பூரண ஆதரவை வழங்கவேண்டும். முக்கியமாக இலங்கையின் 50 வருட கால இனமுரண்பாடு திரைப்படமாக எடுக்கப்படவேண்டும். அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழ் இனத்தின் நியாயங்களை எடுத்தியம்புவதாக அது அமையவேண்டும். இன்றைய கால கட்டத்தில புலம்பெயர் தமிழ் மக்களாலேயே இப்பணியும் மேற்கொள்ளப்பட முடியும்-என்றார்.

(ப-204)

# கல்வியை வழங்குவதோடு ஒழுக்கமுள்ள பிரஜைகளையும் உருவாக்கவேண்டும்

## பாடசாலைகளின் பணி பற்றி எடுத்துரைப்பு

வலி.தென்மேற்கு,ஓக.30

பாடசாலைகள் கல்வியை மட்டும் மாணவர்களுக்கு வழங்கும் இடங்களாக நின்றுவிடாது அவர்களை நல்லொழுக்கமிக்கவர்களாகவும், ஆற்றல்மிக்கவர்களாகவும் உருவாக்கி நல்ல எதிர்கால பிரஜைகளாக மிளிரச் செய்யும் பெரும் பொறுப்பும் பாடசாலைகளுக்கு உரியது. இந்த வகையில் இடம்பெயர்ந்து பல்வேறு வசதிக் குறைவுகளுடன் இயங்கிவரும் இப்பாடசாலையானது கல்விச் சேவையில் தரம் குன்றாது நல்லதொரு மாணவ சமுதாயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு சேவையாற்றி வருவதை பாராட்டாமல் இருக்க முடியாது

கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தின் பொன்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் வலிகாமம் கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மகா வித்தியாலய அதிபர் சு.சிவபாதரத்தினம் தலைமையில் சண்டிலிப்பாயிலுள்ள வித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்விழாவில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீனகர்த்தாவும், பிரதம குருக்களுமான ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்களின் ஆசியுரை வாசிக்கப்பட்டது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்-சகல வசதிகளுடனும் இயங்கிவந்த இப்பாடசாலை கடந்த 1990ஆம் ஆண்டில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலையால் இடம்பெயர்ந்து அல்லலுற்று பல்வேறு இடங்களிலும் இயங்கி தற்போது இங்கு இயங்கி வருகின்றது. இப்பாடசாலை பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்த போதிலும் அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையால் மாணவர்களுக்கு கல்விச் சேவைகள் தொடர்ந்தும் கிடைத்து வருகின்றது. பொன்விழாவைக் கொண்டாடும் இப்பாடசாலையானது எதிர்காலத்தில் மென்மேலும் வளர்ச்சிபெற்று மாணவர்களுக்குச் சிறந்த சேவைளை வழங்கவேண்டும். என்று கூறினார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தெல்லிப்பழை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் உரையாற்றுகையில்-செல்வத்துள் அழியாச் செல்வம் கல்விச் செல்வம் அதனை வழங்குகின்ற இப்பாடசாலை ஆலயத்திற்கு ஒப்பானது என்று கூறினால் மிகையாகாது. இடம்பெயர்ந்த மாணவர்களைப் பெரும்பான்மை மாணவர்களாகக் கொண்ட இப்பாடசாலையின் அடிப்படைத் தேவைகள் பல இன்னும் நிறைவேற்றப் படாமல் உள்ளன. இவற்றை எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்கு எமது ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் -என்றார்.

பொன்விழா மலர் ஆய்வுரையை முன்னாள் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபர் சைவப் புலவர் சு.செல்வத்துரை நிகழத்தினார். நிறுவுநர் நினைவுப் பேருரையை திருமதி ப.கணேசதுரை நிகழ்த்தினார். கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட வித்தியாலயத்தின் ஆரம்ப கால ஆசிரியர் கா.சரவணமுத்து உட்பட மற் றும் பலர் இவ்விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். பழையமாணவர் சங்க செயலாளர் நா.வரதேவன் நன்றி கூறினார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இறுதியில் இடம்பெற்றன.

(ப-135)




# சிந்தனை சிறப்பாக இருந்தால் உன்னத நிலை அடையலாம்

நல்லூர்,ஓக.30

ஒருவருடைய சிந்தனைகள், எண்ணங்கள் உயர்வாக இருப்பின் அவன் சமுதாயத்தில் உன்னத நிலையை அடைய முடியும். எமது மாணவர்கள் மேன்மையுடையவர்களாகத் திகழ நல்ல சிந்தனைகளை மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட எந்திரி வீ. யோகேந்திரன் கூறினார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பரிசளிப்புவிழா என்.விஜயசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

எந்திரி யோகேந்திரன் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

இங்கு மாணவனாக இருந்தபோது பெற்ற அனுபவங்கள், முகாமைத்துவப் பண்புகள் இன்று ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் வடபகுதித் தலைவராகப் பணிபுரியக் கூடிய தகைமையை எனக்குத் தந்துள்ளது. நான் சித்தியடைந்த சமயம் நீங்கள் எங்கே ரியூஷன் எடுத்தனீர்கள் எனப் பலர் கேட்டார்கள் நான் ரியூஷனுக்காக எங்கும் அலையவில்லை.

இங்கு கற்பித்த ஆசிரியர்கள் மாணவரிடத்தில் தமது கவனத்தை முழுமையாகச் செலுத்தினார்கள். நூலகத்தை உரிய முறையில் பயன்படுத்தினேன். பாடசாலைகளில் கற்றுத் தருவதை மிகவும் நுணுக்கமாக அவதானித்துக் கொண்டால் ரியூசன் அவசியமில்லை. வாசிப்புப் பழக்கம் கல்வியில் முக்கியமான தேவை.

பல திறமைசாலிகளை உருவாக்கிய கல்லூரி இது. அன்றும் சரி இன்றும் சரி அதிபர்களும் ஆசிரியர்களும் இந்தக் கல்லூரியில் மிகுந்த ஈடுபாட்டுடன் தமது பணிகளை மேற்கொள்கிறார்கள். அது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. எதிர்காலத்தில் எமது மண்ணுக்கு எத்தனையோ துறைசார் நிபுணர்கள், கல்வியாளர்களை வழங்கிப் பெருமை சேர்க்கும் - என்றார்

கல்லூரி முதல்வர் க. இராசதுரை. ஓய்வு பெற்ற நூலகர் எஸ்.மாணிக்கவாசகர், தெ.தர்சன் ஆகியோரும் பேசினார்கள்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குத் திருமதி பிரேமவதி யோகேந்திரன் பரிசில்களை வழங்கினர்.

(ப.111-204)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1955 - 08 - 20



மறைவு 2004 - 08 - 30

### செல்வி ஞானமுத்து மங்களமரிலீலா (கிளி)

எம்மை வளர்த்த அம்மாவே!
எங்கள் அன்ராவே!
ஆண்டு ஒன்று மறைந்தாலும்
என்றும் மறையாது
உங்கள் அன்பும் நினைவுகளும்....

உங்கள் நினைவால் வாடும்:
25, மூலாய் லேன், சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.
அன்புச் சகோதரி, கணவர், பிள்ளைகள்.
(39357)(26-14-45)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இரத்தினசிங்கம் அசன்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| (Ariyalai, Jaffna) | (Wembley, London) |
| 10-09-1982 | 30-08-2003 |

எம்மண்ணில் நெருக்கடி நிலை என்று தன்னுயிர்
காப்பதற்குக் கடல் கடந்து சென்று அந்நிய நாட்டில்
தஞ்சம் புகுந்து 'திரைகடல் ஓடியும் திரவியந்தேடு' என்ற
வாக்குக்கு அமைய - பொருளீட்டித் தன் குடும்பத்தை
உயர்த்தலாம் என்ற ஆவலோடு சென்றீரே!
அங்கு எம் உறவினர், சகோதரர்களுடன் இணைந்திருந்து
இரண்டு வருடகாலம் வாழ்ந்தீரே!
மிகக்குறுகிய காலத்தில் கயவர்
கூட்டத்தால் ஈனஇரக்கமின்றித்
தாக்கப்பட்டு இன்னுயிர் நீத்தீரே!
இனி எப்பிறப்பில் உன்னைக் காண்போமடா?
ஆவி பிரியும்போது என்ன எண்ணிப்
பிரிந்ததோ நாமறியோம்.

77, சுப்பிரமணியம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
- குடும்பத்தினர்.
(39373)(26.14.45)

## மரண அறிவித்தல்

### குணரட்ணம் ஜெயகாந்தன் (ஜெயா)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயா என அழைக்கப்படும் குணரட்ணம் ஜெயகாந்தன் 20-08-2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நா.குணரட்ணம் (ஆசிரியர்) யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும் லவன், டினேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீகாந்தன், பத்மகாந்தன், விஜயகாந்தன், திருமதி சௌந்தரராஜன் மாலினி, ரகுகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.08.2005) புதன்கிழமை நோர்வேயில் நடைபெற்று, இலங்கை நேரப்படி மாலை 5 மணிக்குத் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இல.15, அருளம்பலம் ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம். (39373)(26.14.45)
தகவல்: கு.ரகுகாந்தன் (தம்பி).

இலங்கை நிர்வாக சேவை போட்டிப்பரீட்சை
**SLAS**
அநேக அலுவலர்களின் வேண்டுகோளுக்கு இணங்க
யாழ்.முன்னணி ஆசிரியர் குழுவினரால்
* பொது அறிவு
* பொது நுண்மதி
* கட்டுரையும் சுருக்கமும்
ஆரம்பம்: 01-09-2005
நேரம்: 5.00 (பு.நே.)
பதிவுகளை நிரு கல்வி நிலையம் - கோண்டாவில் முற்கூட்டியே பதிவுசெய்யவும்.
(39434)

**ஆசிரியர் தேவை**
மல்லாகத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்குத் தரம் 6 - 11 வரை தமிழ், சமூகவியல் பாடங்களைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர் தேவை.
தொடர்பு: 0779217992.
(39417)

### யாழ்.வலய ஆசிரியர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரணதர வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளின் கணிதபாட ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளைமறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கணித ஆசிரியர்கள் அனைவரும் இக் கூட்டத்திற்கு வரும்போது அண்மையில் நடைபெற்ற கணிதபாட முன்னோடிப் பரீட்சை தொடர்பான சகல ஆவணங்களையும் கொண்டு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (3-202)

### உயர்தரப் பரீட்சைமுடிவுகள் 8ஆம் திகதி வெளியிடப்படும்

கொழும்பு, ஓக.30

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் எதிர்வரும் 8ஆம் திகதி வெளியிடப்படும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

வினாத்தாள்கள் திருத்தும் பணி ஏற்கனவே முடிவடைந்து விட்டது. தற்போது புள்ளிகள் கணனியில் பதிவுசெய்யப்பட்டு வருகிறன. அடுத்தவாரம் இப் பணிகள் யாவும் பூர்த்தியாகிவிடும். பல்கலைக்கழக அனுமதிக்கான ஒழுங்குகளைச் செய்வதற்கென பரீட்சை முடிவுகள் எதிர்வரும் 10ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்என ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த மாதம் இறுதிப்பகுதியில் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### மின் இணைப்பு

சுழிபுரம்,ஓக.30

பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்துக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனால், பொது வைபவங்களை இந்த மண்டபத்தில் நடைத்த வசதியேற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கிராம முன்னேற்றச் சங்கத்தினர் சங்கநிதியில் மின் இணைப்பு வேலைகளை மேற்கொண்டிருந்தனர். (எ-28)

**ECBC**
காமா அபாக்கஸ்
புதிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்
GAMA ABACUS
1) வள்ளுவர் அக்கடமி - உரும்பிராய்
2) வளர்மதி - கண்டி வீதி, சாவகச்சேரி
பிரதி திங்கள் 4 மணிக்குப் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.
3) IBS கல்வியகம் - சுண்டுக்குழி
4) கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
5) நிரு கல்வியகம் - கோண்டாவில்
T.P.: 0773276362.
ECBC KidsManages College
850, Hospital Rd., Jaffna.
(39428)(26.14.45)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 * 09 * 1935



மறைவு 05 * 09 * 1999

### அமரர் வல்லிபுரம் அப்பாத்துரை
(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்)

அன்பின் பிறப்பிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
விளங்கிய உங்கள்
நினைவுகள் நீண்டு வருகின்றதே
ஆண்டு ஆறு கடந்தபின்பும்!

உங்கள் நினைவுடன்:
"தாரணிவாசா" உடுவில் கிழக்கு, உடுவில்.
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.
(39340)(46-14-45-26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 1945 * 11 * 09 (யாழில்)



விண்ணில் 2005 * 08 * 01 (லண்டனில்)

அமரர் வைத்திய நிபுணர்

### சீமாம்பிள்ளை வேதநாயகம்
*M.B.B.S.(CEY.),F.R.C.S, M.R.C.O.G.(Eng.)*

அவர்கள் 01-08-2005இல் லண்டனில் இறைவனடி சேர்ந்தார். காலஞ்சென்ற திரு.திருமதி சீமாம்பிள்ளை ஞானம்மா தம்பதிகளின் பாசமிகு இளையபுத்திரன்.

''இரக்கம் நிறைந்த இயேசுவே இவரது ஆன்மா சமாதான ஒளியில் ஒளிர்வதாக''
'யார் அறிவார் சாநாளும் வாழ்நாளும்'

இவரின் ஆன்மசாந்திக்காக நாளை (2005-08-31) புதன்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்.சுண்டுக்குழி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

இல.60, கோயில் வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

தகவல்: துரை ஆரோக்கியதாசன், முன்னாள் பிரதி அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை.
(சி/44834)(46-14-45-25)



ஒட்டுசுட்டான் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் 'ரிவிபல' இராணுவ நடவடிக்கை காரணமாக பலத்த சேதமடைந்தது. அது இன்றுவரை புனரமைக்கப்படாமல் பாழடைந்த நிலையில் இருப்பதைப்படத்தில் காணலாம். *(படம்: ஒட்டுசுட்டான் செய்தியாளர்)*

# விசுவமடு விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள்

பரந்தன்,ஓக.30

விசுவமடு படித்த வாலிபர் திட்ட விவசாயிகள் நீர்ப்பாசனம் மேற்கொள்வதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக ஜேர்மன் நாட்டு மக்கள் முல்லைத்தீவு மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் 'துயர் துடைக்கும் நிதியம்' ஊடாக மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நீர்இறைக்கும் இயந்திரங்களை வழங்கியுள்ளனர்.

இது தொடர்பான நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி விசுவமடு, தொட்டியடி 'பம்பேஸ்' நீரிறைக்கும் இயந்திரங்கள் பொருத்தி வைக்கும் இடத்தில் நடைபெற்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் திட்ட ஆலோசகர் கி.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மங்கள விளக்கினை ஜேர்மன் நாட்டில் வசிக்கும் குழந்தைவடிவேல் - சரோசா தம்பதியினர், கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டுக் குழுத்தலைவி திருமதி தேவாம்பிகை காசிநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

நீரிறைக்கும் பம்பியை ஜேர்மன் நாட்டில் வசிக்கும் அ.குழந்தைவடிவேல், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆகியோர் வழங்கி இயக்கி வைத்தனர்.

கருத்துரைகளைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் சு.சின்னண்ணா, நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், விசுவமடு கிழக்கு-மேற்கு கிராம உத்தியோகத்தர் சு.செல்வவிநாயகர், தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பாலசுந்தரம், ஜேர்மனி நாட்டில் வசிக்கும் அ.குழந்தைவடிவேல் ஆகியோர் நிகழ்த்தினர்.

ஜேர்மன் நாட்டுமக்கள் இரண்டாவது தடவையாக முல்லைத்தீவு மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் துயர்துடைப்பு நிதியத்தினூடாக நீரிறைக்கும் இயந்திரங்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ-352-204)

## இரண்டாம் தவணை பரீட்சைகள்

வட்டக்கச்சி,ஓக.30

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் இரண்டாம் தவணைப் பரீட்சைகள் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 6ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

வலய ரீதியாக நடைபெறும் இப்பரீட்சை தரம் 3 தொடக்கம் தரம் 11வரை நடைபெறவுள்ளது. (எ-405-202)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கிளிநொச்சி,ஓக.30

வடமராட்சி கிழக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து செம்பியன்பற்று இடைத்தங்கல் முகாமில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை அண்மையில் நடத்தின.

இந்நிகழ்வில் செம்பியன்பற்று கிராம அலுவலர், முகாம் தலைவர்கள், சுகாதாரப் பரிசோதகர், மருதங்கேணி வைத்தியசாலை தாய் சேய் நல உத்தியோகத்தர், தமிழீழ சுகாதார சேவை இணைப்பாளர், ஏற்பாட்டு நிறுவனங்களின் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பொதுவான நோய்கள் தொடர்பான கருத்துரைகள் இடம்பெற்றதுடன் வீடியோப் படக் காட்சியும் காண்பிக்கப்பட்டது. (எ-202)

# குமுதன் குடியிருப்பு மக்கள் அடிப்படை வசதியின்றி அவதி

புளியங்குளம்,ஓக.30

மல்லாவி குமுதன் குடியிருப்பில் இடம் பெயர்ந்து வசிக்கும் மக்கள் அடிப்படை வசதிகளற்ற நிலையில் பெருஞ் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக வீடுகளை இழந்த 60 குடும்பங்கள் மேற்படி குடியிருப்பில் வசித்துவருகின்றன.

குடிதண்ணீர், மலசலகூடம் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாததால் இம்மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் -

பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள இக்குடும்பங்கள், தமது தற்காலிகக் கொட்டகைகளைக் கூடப் புனரமைக்க முடியாத நிலையில் உள்ளன என்றும் - கூறப்பட்டது.

தொண்டு நிறுவனங்கள் இந்தக் குடியிருப்பு மக்களின் அவலநிலையைக் கருத்தில் கொண்டு உதவ முன்வரவேண்டுமென்று குடியிருப்பு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(எ-355-202)

## மலேரியாவின் தாக்கம் குறைவு என அறிவிப்பு

பரந்தன், ஓக.30

கிளிநொச்சி மாவட்டத்தில் மலேரியா நோயின் தாக்கம் வெகுவாகக் குறைந்துள்ளது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நோயாளர்களின் இரத்தப் பரிசோதனை அறிக்கையின்படி மலேரியா நோயின் தாக்கம் குறைந்துள்ளமை இனங்காணப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே - அண்மையில் சுகாதாரப் பகுதியினர் கிளிநொச்சியில் மலேரியா நுளம்புகள் உருவாகும் இடங்களை இனங்கண்டு தடுப்பு மருந்துகளை விசிறி குடம்பிகளை அழித்துள்ளனர்.

(எ-352-204)

# கிளிநொச்சி மாவட்ட விஞ்ஞான வினாடி-வினாப் போட்டி முடிவுகள்

வட்டக்கச்சி,ஓக.30

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட விஞ்ஞான வினாடி- வினாப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**தரம் - 6**

ச.பானுப்பிரியன் - (கிளிநொச்சி ம.வி.), மு.டிசாந்தினி - (திருவையாறு ம.வி.), ச.மிதுர்சன் - (திருவையாறு ம.வி.)

**தரம் - 7**

ச.வேனிலன் - (கிளிநொச்சி இந்துக் கல்லூரி),தெ.மெடோனா கர்ஷாலினி - (புனித திரேசா பெண்கள் கல்லூரி), சி.ஹெல்சிகா - (புனித திரேசா பெண்கள் கல்லூரி)

**தரம் - 8**

அ. ஆருத்திரன் - (கிளிநொச்சி ம.வி.), ஜெ. சத்தியஜீவிகா - (அக்கராயன் ம.வி.),ம. மோகனா - (இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா.)

**தரம் - 9**

தி.கீதாலயன் - (கிளிநொச்சி ம.வி.), தி.ஸ்ரீரஜீவினி - (கிளிநொச்சி இந்துக் கல்லூரி),தி. றொசாந்தினி - (கிளிநொச்சி ம.வி.)

**தரம் - 10**

சி.சர்வேஸ்வரி - (புனிதபற்றிமா றோ.க. வித்தி),யே. ஜெனிற்றா - (கிளிநொச்சி இந்துக்கல்லூரி),சு. சுரேக்கா - (வட்டக்கச்சி ம.வி.)

**தரம் - 11**

பா. தனதீபன் - (கிளிநொச்சி ம.வி.),கு. ஷோபிஜா - (கிளிநொச்சி ம.வி.), பா.மயூரன் - (கறுக்காய்த்தீவு ம.வி.) (எ-405-202)



தென்னிலங்கையைப் போன்று வன்னியிலும் 'ஏலம்' பயிர்ச்செய்கையை மேற்கொள்ளலாம் என்பதனை புதுக்குடியிருப்பு, விசுவமடு றெட்பானா கிராமத்தைச் சேர்ந்த எஸ்.ஆறுமுகம் என்ற விவசாயி நிரூபித்துக்காட்டியுள்ளார். தமது தோட்டத்திலுள்ள 'ஏலம்' பயிருடன் விவசாயி ஆறுமுகம் காணப்படுவதைப் படத்தில் காணலாம். *(படம் : மு.கந்தசாமி, பரந்தன் செய்தியாளர்)*

# ஆசிரியர் விடுதி இன்மையால் கல்விச் செயற்பாட்டில் பாதிப்பு

*மாறாஇலுப்பை பாடசாலை அதிபர் கவலை*



ஒட்டுசுட்டான்,ஓக.30

வவுனியா வடக்கு, மாறாஇலுப்பை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியர் விடுதிகள் இல்லாமையால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே, தொண்டு நிறுவனங்கள் இதுவிடயத்தில் அக்கறை செலுத்தவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் மேற்படி பாடசாலையின் அதிபர் சி.இராசரத்தினம்.

பாடசாலையின் கல்விநிலை தொடர்பாக அவரிடம் கேட்டபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது பாடசாலை முற்றுமுழுதாக இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குட்பட்டது. இதனால் பாடசாலையின் வளங்களும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் கல்வியும் சீர்குலைந்தது.

ஆனால், தற்போது பாடசாலை வளங்களை ஓரளவு சீராக்கியுள்ளோம். மாணவர்களின் இழந்த கல்வி நிலையையும் தற்போது மீட்டு வருகிறோம். ஆயினும் எமது பாடசாலையின் தேவைகள் இன்னும் பலவுள்ளன.

பாடசாலை வளாகத்தின் வேலிகள் சீர் செய்யப்படவில்லை, விளையாட்டு மைதானமும் பற்றைக் காடாகவுள்ளது. மாணவர்களால் உருவாக்கப்பட்ட தோட்டமும் அழிக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் சீர்செய்வதற்கு முயற்சிகள் எடுத்து வருகின்றோம்.

எமது பிரதேசம் பின்தங்கிய பிரதேசமாகையால் ஆசிரியர்கள் தங்கிநின்று பணிபுரிவதற்கு விடுதிகள் எதுவும் இல்லை. இதனால், தூர இடங்களிலிருந்து வருகின்ற ஆசிரியர்கள் பெருஞ்சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு எம்மால் இயன்றதான சிறுகொட்டில் ஒன்றை ஆசிரியர்கள் தங்குவதற்காக அமைத்து வருகின்றோம்.

எமது பாடசாலை வீதியூடாகப் போக்குவரத்துச் சேவை எதுவும் நடத்தப்படுவதில்லை. இதனால், ஆசிரியர்கள் போக்குவரத்தில் பெருஞ் சிரமங்களை எதிர்கொள்வதோடு மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்படுகின்றது.

போக்குவரத்துச் சேவை நடத்தப்படாததால் எமது பாடசாலையோடு குளவிசுட்டான், மாறாஇலுப்பை, வேலங்குளம் ஆகிய பிரதேச பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

(எ-341-202)







# தபாலதிபர் நியமனம் இல்லை மூடப்பட்ட நிலையில் தபாலகம்

பரந்தன்,ஓக.30

தபாலதிபர் நியமிக்கப்படாமையால் ஆனையிறவு தபாலகம் மூடப்பட்டுள்ளது.

இங்கு கடமையாற்றிய தபாலதிபர் ஓய்வு பெற்றுவிட்டார் என்றும்-

அவரது இடத்திற்குப் புதிய தபாலதிபர் ஒருவர் நியமிக்கப்படாமையே தபாலகம் மூடப்பட்டுள்ளமைக்குக் காரணம் என்றும்- கூறப்பட்டது.

தபாலகம் மூடப்பட்டுள்ளமையால் ஆனையிறவு, தட்டுவன்கொட்டி ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் கடிதத் தொடர்புகளை மேற்கொள்வதில் பெருஞ் சிரமங்களை எதிர்கொள்வதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மீளக்குடியமர்ந்த பகுதி மக்களின் சிரமங்களை நீக்குவதற்கு வசதியாக இந்தத் தபாலகத்துக்கென தபாலதிபர் ஒருவரை நியமனம் செய்ய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(எ-352-204)

## ஒருநாள் பயிற்சி

வட்டக்கச்சி,ஓக.30

பெண்கள் அபிவிருத்தி, புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் வட்டக்கச்சி, மாயவனூர் கிராமப் பெண்களுக்கான ஒருநாள் பயிற்சி எதிர்வரும் 3ஆம் திகதி மாயவனூர் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-405)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயக மண்ணில் 07 07 1925



தாயக விண்ணில் 26 08 2004

### திருமதி நடராசா முத்துப்பிள்ளை

திதி: 30.08.2005

அன்பாலே அரவணைத்து அறிவாலே வழிகாட்டி
எமை ஆளாக்கி வாழவைத்த அன்புத் தெய்வமே!
ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்
புன்னகை தவழும் உங்கள் மதிமுகம் இன்னமும்
எங்கள் கண்களில் தெரிகின்றதே - அம்மம்மா

6ஆம் வட்டாரம்,
இரம்பைக் குளம்,
நெடுங்கேணி. (39441)(42.16.15)

அழகராசா பிரதீஸ்,
(U.K - பேரன்)

## காரைநகர் அபிவிருத்திக்கு பிரதேச சபை நிதி ஒதுக்கீடு

ஊர்காவற்றுறை,ஒக.30

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து காரைநகர் பிரதேசத்தில் ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

காரைநகர் வெளிச்சவீடு புனரமைப்பிற்கு 50 ஆயிரம் ரூபாவும் காரைநகர் சிறிமுருகன் முன்பள்ளி நிலையத்திற்கு தளபாடம், கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்கு 30 ஆயிரம் ரூபாவும் காரைநகர் சிவகாமி அம்மன் கோயில் சனசமூக நிலையத்திற்கு தளபாடம் வழங்குவதற்கு 10 ஆயிரம் ரூபாவும் தோப்புக்காடு கிராமத்திற்கு குடிதண்ணீர் விநியோகத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணிகளை விரைவில் நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார். (எ-16)

## முட்பற்றைகள் எரியூட்டி அழிப்பு

கோப்பாய்,ஒக.30

கோப்பாய் - கைதடி வீதியின் இரு மருங்கிலும் போக்குவரத்தில் பெருஞ்சிரமங்களை ஏற்படுத்தி வந்த தொடர் முட்பற்றைக் காடுகள் அண்மையில் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டு எரியூட்டப்பட்டன. (எ-72)

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 03 01 1946



மறைவு 30 08 2004

அமரர்

### கலாநிதி சிலோன் விஜயேந்திரன் (M.A.D.Lit)

வாழையடி வாழையென
வந்துலவி வென்ற
வாகைசூழ் 'கலைத்தமிழன்'
வழிமரபில் உதித்தெழுந்த
'வயாவிளான் சூரியனே'
'சிலோன் விஜயேந்திரன்' எனும்
சிலிர்ப்பூட்டும் படைப்பாளியே
'இயல், இசை, நாடகமாய்'
இருந்து நடை பயின்று

எங்கள் 'குலக்கொழுந்தாய்'
பெரும் புகழைச் சேர்த்தவனே
ஈழத்தில் முளைவிட்டு
இந்தியாவில் வேரூன்றி
ஆழத்தமிழ்க் கலையும்
அழகொளிரும் இலக்கியமும்
படைத்தளித்த 'பெருந்தமிழா'
இன்றுனது ஓராண்டு நிறைவில்
எம் இதய அஞ்சலியை ஏற்றிடுக.

பலாலி வீதி,
உரும்பிராய். (39432)(42.15.16)

உடன் பிறப்புகள்
மைத்துனர், மைத்துனி, பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவலைகளும் சபிண்டீகரண அழைப்பும்

பிறப்பு 20 - 12 - 1933



இறப்பு 01 - 08 - 2005

### திருமதி நவரத்தினம் மகாலட்சுமி (பொழிதொளி)

அன்பின் உறைவிடமாய்
எம்மைஎல்லாம் பாசமாகக் காத்தவளே!
அம்மா எம் இனிய குலவிளக்கே!
பாரினிலே எம்மை எல்லாம்
பரிதவிக்க விட்டுப் பாதியிலே
அணைந்ததென்ன பொழிதொளியாய்
ஒளிர்ந்தாயே எம்மவளே - அம்மா
பார்த்திருக்க அணைந்ததுவா
உன் ஒளிவிளக்கு

31.08.2005 அன்று காலை 7மணிக்கு இடம்பெறும் சபிண்டீகரண நிகழ்விலும் அதன் பின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அன்னாரின் பிரிவையிட்டு எம்மோடு துயர் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பழைய சோடாக்கடை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

உன்பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(39192)(42.18.34)

## துன்பந்தீர அருள்வாக்கு

குழந்தைப் பேறில்லாதவர்கள், திருமணத்தடை, தோஷம் உள்ளவர்கள், குடும்பப் பிரச்சினைகள், வெளிநாடு செல்லத்தடை, தொழிலில் முன்னேற்றமின்மை கல்வியில் முன்னேற்றமின்மை, தீராத நோய் தீர அருள்வாக்குக் கூறப்படும். கொழும்பு - 06, பெர்ணாந்து வீதியிலுள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான நாகபூஷணி அம்மன் ஆலயத்திலிருந்து வந்த ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் 31.08.2005 முதல் 03.09.2005 வரை யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறவுள்ளார்.

தொடர்புகொள்ளவேண்டிய இடம்:

### ஞானவைரவர் ஆலயம்


கலாசாலை வீதி, 2ஆவது ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

பூசை நேரம்: காலை 10.30 மாலை 6 மணி

02.09.2005 விஷேடபூசை, அபிஷேகம், அன்னதானம் நடைபெறும்.

(39181)(42.15.16)

## 45 ஆம் நாள் நினைவலைகள்



அன்னை மடியில் 03-03-1981
ஆண்டவன் அடியில் 17-07-2005

அமரர்

### தர்மையா தேவரஞ்சன்

வாழும் வயதினிலே வானுலகம் சென்றாயோ
நேசக் கரம் நீட்டிப் பாசத்துடன் பழகிடுவாய்
குணத்தின் குன்றாக பலர் மனதைக் கவர்ந்திடுவாய்
காலத்தின் கோலமோ காலன் வந்து உனைக் கவர்ந்தான்
கருணை உள்ளம் கொண்டவனே உனைக் காணாமல் தவிக்கின்றோம்.
பூப் போன்ற உன் முகத்தை எம் இதயத்தில் சுமக்கின்றோம்.

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உன்பிரிவால் துடிக்கும்:
சுப்பதூஸ்
உரிமையாளரும்
ஊழியர்களும்.

434, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (39440) (39.15.16.42)

## கொழும்பில் குடும்ப நல பயிற்சி

கொழும்பிலுள்ள குடும்ப திட்ட சுகாதார நிலையத்தில் கருத்தடை தொழில் நுட்பம் தொடர்பான ஐந்து நாள் பயிற்சி நெறி ஒன்று எதிர்வரும் 5ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொண்டு பயிற்சி பெறுவதற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் செல்லவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலிருந்து 11 வைத்திய அதிகாரிகள் இதில் கலந்து கொண்டு பயிற்சி பெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-135)

## சண்டிலிப்பாயில் நடமாடும் சேவை

சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவைச் சேர்ந்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடமாடும் செயலகமொன்று நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் செயற்படவுள்ளது.

மேற்படி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஜே/129, ஜே/130, ஜே/133, ஜே/134, ஜே/135, ஜே/136, ஜே/139 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கே இந்த நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகள், காணிப்பதிவு போன்றவை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்காக இந்த நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

நோர்வேயின் அனுசரணையுடன் இச்சேவை நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-100-202)

## மரண அறிவித்தல்கள்

### கிருஷ்ணபிள்ளை கந்தசாமி



கரணவாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை கந்தசாமி அவர்கள் 26-08-2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் இராசமணியின் அன்புக் கணவரும் நந்தகுமார் (சுவிஸ்), பாலகுமார் (சுவிஸ்), இந்திரகுமார் (கனடா), கமலேஸ்வரி (கனடா), சிவகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சேகர், விஷ்ணுகா, சசிகலா ஆகியோரின் மாமனாரும் கிருஷாந், சஞ்சிகா, நேருஜன், சஜீவ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31-08-2005) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, மு.ப.11மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வெவ்வங்கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தூதாவளை,
கரணவாய், கரவெட்டி. (39398)(46-18-34-42)

தகவல்:
குடும்பத்தினர்.

### தம்பிராஜா இராஜநாயகம்

(ஒய்வுபெற்ற கணக்காளர்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட தம்பிராஜா இராஜநாயகம் அவர்கள் 27.08.2005 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் சந்திரமோகன், வசந்தகுமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகநாயகம், காலஞ்சென்ற நவமணி, மலர்மணி, செல்வநாயகம், குணநாயகம், அரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2005) செவ்வாய்க்கிழமை கொழும்பில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலக்கம் - 09,
மாதங்காவத்தை ஒழுங்கை,
கொழும்பு -6. (39433)(42-18-34)

தகவல்:
த.கனகநாயகம்,
உரும்பிராய்.

தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி

# கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து மட்டும் பதினெட்டு வீரர்கள் பங்கேற்கத் தகுதி

வட்டக்கச்சி,ஓக.30

கொழும்பில் நடைபெறவிருக்கும் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டு விழாவில் பங்குபற்ற கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 18 வீர வீராங்கனைகள் தகுதிபெற்றுள்ளனர்.

அண்மையில் வவுனியாவில் நடந்த மாகாண மட்டப்போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றே இவர்கள் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

பெருவிளையாட்டுப் போட்டிகளில் உடற் பயிற்சியில், பெண்கள் பிரிவில் இராமநாதன் அ.த.க.பாடசாலையும் சதுரங்கத்தில் 15 வயது ஆண், பெண்பிரிவுகளில் வட்டக்கச்சி ம.வியும் தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளன.

தேசிய மட்டத்துக்குத் தெரிவான வீர, வீராங்கனைகள் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

ஆண்கள் - வி.லிதர்சன் (பளை மத்திய கல்லூரி - ஈட்டிஎறிதல்), பா.தனுசாந் (கண்டாவளை ம.வி - உயரம் பாய்தல்)

பெண்கள்- யோ.நிருஷா-(சோரன்பற்று கணேசா வித். -100 மீ.கட்டவேலி), கு.கணேஸ்வரி - (கிராஞ்சி அ.த.க.பா.- ஈட்டி எறிதல்)

**17 வயதுப் பிரிவு**

ஆண்கள் - சி.மாதுங்கன் - (அக்கராயன் ம.வி. - தட்டெறிதல்), நா.றஜீபன் - (சிவநகர் அ.த.க.பா. - முப்பாய்ச்சல், உயரம் பாய்தல்)

பெண்கள் - சீ.தாரணி - (அக்கராயன் ம.வி. - குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டி எறிதல்)


**19 வயதுப் பிரிவு**

ஆண்கள் - ச.செல்வகுமாரி- (கிளிநொச்சி இந்துக்கல்லூரி - குண்டெறிதல்), இ.துவாரகா - (அக்கராயன் ம.வி.-நீளம்பாய்தல், 100 மீ.ஓட்டம், 200 மீ.ஓட்டம்)

**21 வயதுப் பிரிவு**

ஆண்கள் - செ.செல்வறஜீபன் - (தருமபுரம் ம.வி. - தட்டெறிதல்), கு.கோபிநாத் - (கிளிநொச்சி இந்துக்கல்லூரி - உயரம் பாய்தல்), த.இதயகாந் - (பூநகரி நல்லூர் ம.வி. - முப்பாய்ச்சல்)

பெண்கள் - க.றஞ்சலா -(அக்கராயன் ம.வி. - 800 மீ. ஓட்டம், 1500 மீ.ஓட்டம்), வி.லோ.டிவினியா நிலூஜின் -(கிளிநொச்சி ம.வி.- 800 மீ. ஓட்டம், 3000 மீ. ஓட்டம்), சி.சிறிமிதுலா - (இராமநாதபுரம் ம.வி. -உயரம் பாய்தல்), லூ.கிறிஸ்தீனா - (கிளிநொச்சி ம.வி. - உயரம் பாய்தல்), கு.துஷ்யந்தினி - (பரந்தன் இந்து ம.வி. - குண்டெறிதல், தட்டெறிதல்), கி.ஜெயராணி - (பரந்தன் இந்து ம.வி. - தட்டெறிதல்). (3-405)



போரூட் நிறுவனத்தின் உதவியுடன் உடுவில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பன்னிரெண்டு கிராமங்களுக்கு இடையேயான சமூகமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. இதில் முட்டை எறிந்து ஏந்தும் போட்டியில் ஒரு பகுதியைக் காணலாம். *(படம் : நேசன்)*

'அஸ்ரா' கிண்ண கிரிக்கெட்

# 17 வயதுப் பிரிவில் சென்.பற்றிக்ஸ் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,ஓக.30

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் 'அஸ்ரா' கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 17 வயதுப் பிரிவில் இறுதியாட்டத்துக்கு யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி தகுதிபெற்றுள்ளது.

நீர்கொழும்பு மரிஸ்ரெலா கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரை இறுதியாட்டத்தில் தரணகம மகாவித்தியாலயமும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 49 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் ஆட்டமிழக்காமல் விதுபாலா 43 ஓட்டங்களையும் ஜெனேந்திரன் 23 ஓட்டங்களையும் பத்மமுரளி 20 ஓட்டங்களையும் கொலின் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

கடைசி விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த விதுபாலாவும் கொலினும் 68 ஓட்டங்களைக் குவித்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தரணகம வித்தியாலயம் 48.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 180 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஜீனத்ராஜ் 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டையும் ஜக்சன் 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் றெக்னோ 37 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்றுக் கொழும்பில் நடைபெறவிருந்தது. இந்த ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸை எதிர்த்து தேர்ஸ்ரன் கல்லூரி மோதவிருந்தது. (3)

# ஸ்ரான்லியை வென்றது யாழ்.சென்றல் அணி!

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான 17 வயதுப் பிரிவுக்குட்பட்ட பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஓர் ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திற்கும் இடையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரிஅணி 3விக்கெட்டுக்களை இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றது.

வினோத்குமார் 101 ஓட்டங்களையும் ஷெல்ரன், கிறிஸ்ரியோண்சன், நவநீத் ஆகியோர் முறையே 51, 47, 18 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

இனோசன் 2 விக்கெட்டுக்களையும், கிருஸ்ணா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பொடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 56 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இனோசன் ஆட்டம் இழக்காமல் 21 ஓட்டங்களையும், சுரேஸ் 18 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

மதுப்பிரியன் 5 விக்கெட்டுக்களையும், கிறிஸ்ரி யோண்சன் 3 விக்கெட்டுக்களையும், வியாசன், வினோத்குமார் முறையே தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது.

இனோசன் ஆட்டம் இழக்காமல் 20 ஓட்டங்களையும் சுரேஸ் 16 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

டயான் ஆறு விக்கெட்டுக்களையும் வியாசன் 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர் (3-190)

## பாலர் பாடசாலை விளையாட்டு விழா

வரணி, ஓக.30

தென்னிந்தியத் திருச்சபையின் வரணி பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்குத் திருச்சபை வளாகத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராகவும் கிராம அலுவலர் ந.இராஜகுமாரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (3-170)

தீவக ரீதியாக நடந்த கரபந்தாட்டம்

# காந்திஜீ வி.க. அணியினர் வெற்றிபெற்றுச் சம்பியன்!

ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜீ சனசமூக நிலையமும் காந்திஜீ விளையாட்டுக் கழகமும் இணைந்து, 40 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டும் மறைந்த கிராம மாவீரர்களின் நினைவாகவும் நடத்திய தீவக ரீதியிலான 'செற் அப்' கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் காந்திஜீ வி.க. 'பி' அணி வெற்றி பெற்றது.

தம்பாட்டி காந்திஜீ வி.க (பி) அணியை எதிர்த்து உதயசூரியன் வி.க. (ஏ) அணி மோதியது.

தம்பாட்டி காந்திஜீ வி.க (பி) அணி எதிர்த்து விளையாடிய உதயசூரியன் வி.க. (ஏ) அணியை 25:19, 27:25, 25:21 என்ற செற்கணக்கில் வெற்றி கொண்டது.

இந்த ஆட்டத்திற்கு நடுவர்களாக எ.எவ். செபமாலைமுத்து, கே.டக்ளஸ் ஆகியோர் கடமையாற்றினர். (3-190)

ஸ்கந்தா ஸ்ரார் சுற்றுப்போட்டி

# சென்றலைட்ஸ் அணிக்கு 223 ஓட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ்.விளையாட்டுத் துறையின் ஆதரவுடனும் 'உதயன்' ஊடக அனுசரணையுடனும் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம், அமரர் ஜெயசோதி துஷ்யந்தனின் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஓர் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) வி.க.அணி 151 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கிறாஸ் கொப்பஸ் வி.க . அணிக்கும் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) வி.க. அணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் (சொக்ஸ்) வி.க. அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது.

றோகன், ஜசிந்தன், மதுரஷன், நிஷாந்தன் ஆகியோர் முறையே 38, 24, 57, 42 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

ராஜகாந்தன், மயூரன் முறையே இரண்டு விக்கெட்டுக்களையும், திலீபன், ஸ்ரீதரன் முறையே தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் வி.க. அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 72 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

சறூன், மயூரன், கோபிநாத், ஸ்ரீதரன் முறையே 11, 09, 06, 14 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

சர்ளஸ் 3 விக்கெட்டுக்களையும் பிரகாஸ் 2 விக்கெட்டுக்களையும் ஜசிந்தன், மயூரன், மதுரஷன் ஆகியோர் முறையே தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக சென்றலைட்ஸ் (சொக்ஸ்) வி.க. வீரன் மதுரஷன் தெரிவானார். (3-190)

# ஜொனியன்ஸ் 105 ஓட்டங்களால் வெற்றி!

இந்தச் சுற்றுப்போட்டியில் இடம் பெற்ற மற்றோர் ஆட்டத்தில் 105 ஓட்டங்களால் ஜொனியன்ஸ் வி.க. அணி வெற்றிபெற்றது.

யங்ஸ்ரார் வி.க. அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் வி.க. அணி மோதியதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் வி.க. அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது.

ரட்ணம், நேசவர்மன், மதன்ராஜ், பிரதீபன், விஸ்ணுவர்த்தன் முறையே 41, 22, 40, 22, 20 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

சுலக்ஷன், சயந்தன், செந்தூரன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் வி.க. அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

சயந்தன், கஸ்ரோன், டர்சயன் ஆகியோர் முறையே 26, 30, 17 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

மயூரதன் 4 விக்கெட்டுக்களையும் கரிப்பிரவின், சஞ்சீவ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் மதன்ராஜ், அக்சஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக ஜொனியன்ஸ் வி.க. வீரர் மதன்ராஜ் தெரிவுசெய்யப்பட்டார். (3-190)

# 6 விக்கெட்டுக்களால் பல்கலை வென்றது!

இந்தச் சுற்றுப் போட்டியில் மற்றோர் ஆட்டத்தில் யங்ஸ்ரார் அணிக்கும் யாழ். பல்கலைக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது.

துஸ்யந்தன், ஜொனிற்ரன், ரஜீவன் ஆகியோர் முறையே 45, 27, 07 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

அருள்ராஜ், செந்துரன் முறையே மூன்று விக்கெட்டுக்களையும் ரவிசங்கர் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது.

தனுஸ்காந்தன், ராஜீவன் முறையே 60, 15 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

ஜொனிற்ரன், சந்திரா, சுதாகர், சஜீவன் ஆகியோர் முறையே தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக யாழ்.பல்கலைக்கழக அணி வீரன் தனுஸ்காந்தன் தெரிவுசெய்யப்பட்டார். (3-190)



சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகளில் விநோதஉடைப் போட்டியில் கலந்துகொண்ட சிறார்கள் தமது ஆசிரியைகளுடன் நிற்பதைக் காணலாம். *(படம்:தென்மராட்சிச் செய்தியாளர்)*

# ஈராக்கின் புதிய அரசியல் யாப்பு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

பக்தாத், ஓக.30

ஈராக்கின் புதிய அரசியல் யாப்பு நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

ஷியா மற்றும் குர்திஷ் உறுப்பினர்களினால் இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட இந்த அரசியல் யாப்பை ஷியா தரப்பினர் ஆதிக்கம் செலுத்தும் நாடாளுமன்றம் அங்கீகரித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த அரசியல் யாப்பை முற்றுமுழுதாக நிராகரிப்பதாக சுனி முஸ்லிம்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், ஒக்ரோபர் மாதம் நடத்தப்படவுள்ள சர்வஜன வாக்கெடுப்பின்போது இந்த அரசியலமைப்பு தோற்கடிக்கப்படும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இந்த அரசியல் யாப்பு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வாசிக்கப்பட்டபோது, சுனி முஸ்லிம்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தபோதிலும் அது பயனளிக்கவில்லை.

இதேவேளை, ஈராக்கில் நடைபெறும் வன்முறைகளை முறியடிக்க இந்த அரசியலமைப்பு வழிசெய்யும் எனத் தெரிவித்துள்ள அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் இதனை வரவேற்றுள்ளன.

மேலும், பிரிவினை வாதத்துக்கு எதிராக ஜனநாயகத்திற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி இதுவென அந்த இரு நாடுகளும் தெரிவித்துள்ளன.

இதேவேளை, ஈராக் மீது அமெரிக்கா யுத்தம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து புஷ்ஷின் பண்ணை வீட்டுக்கு அருகே அமெரிக்க எதிர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். போரை எதிர்ப்பவர்கள் ஊர், ஊராகச் சென்று ஆதரவு திரட்டவும் திட்டமிட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீவிரவாதத்துக்கு எதிரான போரைத் தொடங்கிய புஷ் பேரழிவு ஆயுதத்தை அழிப்பதாகக் கூறி ஈராக்மீது போர் தொடுத்தார். இதில் 1,500 இற்கும் மேற்பட்ட அமெரிக்கத் துருப்பினர் உயிரிழந்தனர்.

இந்தப் போரில் சிண்டி ஷீஹான் என்ற பெண்ணின் 24 வயது மகன் கேசி கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கொல்லப்பட்டார்.

இதைத் தொடர்ந்து அவர் போருக்கு எதிரான இயக்கத்தை தொடங்கியிருக்கிறார். அவர் டெக்சாஸ் மாநிலம் கிராபோர்டு என்ற இடத்தில் உள்ள புஷ்ஷின் பண்ணை வீட்டில் தங்கியிருந்த புஷ்ஷைச் சந்தித்துப் பேசச் சென்றார். அவரை பொலீஸார் அனுமதிக்கவில்லை. இதைத் தொடர்ந்து அவர் பண்ணை வீட்டுக்கு வெளியே முகாம் அமைத்து தங்கத் தொடங்கினார். 'அவரை அமைதித்தாய்' என அவரது ஆதரவாளர்கள் அழைக்கிறார்கள்.

பண்ணை வீட்டுக்கு வெளியே நேற்று முன்தினம் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் 2 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். அப்போது ஈராக் போரில் கலந்துகொண்டு இருக்கும் துருப்பினரை கௌரவிக்கும் வகையில் மணி அடிக்கும் நிகழ்ச்சி நடந்தது.

இந்த நிகழ்ச்சிக்கு ஈராக் போரில் உயிர் நீத்த அமெரிக்க சிப்பாய் கேசியின் பெயர் சூட்டப்பட்டது. சிண்டிக்கு ஆதரவாக போரில் தங்கள் மகன்களை பறிகொடுத்த பெற்றோர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டம் நடந்த சந்தர்ப்பத்தில் ஷீஹானின் போராட்டத்தை எதிர்த்து புஷ்ஷுக்கு ஆதரவாகவும் போராட்டம் நடந்தது. புஷ் ஆதரவாளர்கள் பேரணியும் நடத்தினர். பேரணியில் கலந்துகொண்டவர்கள் சிண்டி ஷீஹானுக்கு எதிராகக் குரல் எழுப்பினர். சிண்டி வீட்டுக்குப் போ! என்று சிண்டி எனக்காக நீ பேசமுடியாது! என்றும் அவர்கள் கூச்சல் போட்டனர்.

ஈராக் போர் பற்றி புஷ்ஷுடன் பேச விரும்பும் சிண்டி, புஷ் தன்னைச் சந்தித்துப் பேசும் வரை புஷ்ஷின் பண்ணை வீட்டுக்கு வெளியே தங்கியிருக்கப் போகிறார் என அறிவித்திருந்தார். இப்போது அவர் தன் திட்டத்தை மாற்றிக் கொண்டுள்ளார்.

அவர் எதிர்வரும் 31ஆம் திகதி பஸ் மூலம் சுற்றுப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளார் என்றும், அடுத்த மாதம் செப்ரெம்பர் 24ஆம் திகதி இந்தச் சுற்றுப்பயணம் வாஷிங்ரனில் முடிவடைகிறது. அங்கு வெள்ளை மாளிகைக்கு வெளியே தங்கியிருந்து போராட திட்டமிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-8)

## பாதுகாப்புக்காக துப்பாக்கி பாவிக்க ஈரான் நீதிபதிகளுக்கு அனுமதி!

தெஹ்ரான், ஓக. 30

ஈரான் நீதிபதிகள் தற்பாதுகாப்புக்காக துப்பாக்கிகளை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் தெஹ்ரானில் பிரபல நீதிபதி முஹம்மட் ரெஸா அகாஷெட்டா மீது இனந்தெரியாத துப்பாக்கிதாரியொருவர் துப்பாக்கிச்சூடு நடத்தியமையினால் கண்பார்வையிழந்தார். இதனையடுத்தே தற்பாதுகாப்புக்காக நீதிபதிகள் துப்பாக்கிகளைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நிலம் மற்றும் சொத்து ஊழல் சம்பந்தமான வழக்கு விசாரணைகளில் ஈடுபட்டிருந்த அவர் மீது இவ்வாறு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இதேபோன்று, கடந்த சிலவாரங்களுக்கு முன்னர் மற்றுமொரு பிரபல நீதிபதியொருவர் தலைநகரில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரி ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நீதிபதிகள் மீதான தாக்குதல்கள் அடுத்தடுத்து நிகழ்ந்ததைத் தொடர்ந்தே தற்பாதுகாப்புக்காக துப்பாக்கிகளைப் பயன்படுத்த அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (க-8)

## சதாமுக்கு மரணதண்டனை வழங்கப்படின் அந்தத் தீர்ப்பில் கையெழுத்திடப்போவதில்லை

### ஈராக் ஜனாதிபதி அறிவிப்பு

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் மீதான வழக்கில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டால் அந்த தீர்ப்பில் தாம் கைச்சாத்திடப்போவதில்லை என்று அந்நாட்டு தற்போதைய ஜனாதிபதி ஜலால் தலபானி கூறியுள்ளார்.

கொள்கை அடிப்படையில் மரணதண்டனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார் என்று கூறியுள்ள அவர், அவ்வாறான நிலைமையில் தாம் பதவி விலகப்போகிறார் என்று கூறியுள்ளார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்படும் பட்சத்தில் தமது துணை ஜனாதிபதியை அந்த உத்தரவில் கைச்சாத்திட அனுமதிக்கப்போகிறார் என்றும் -

தமது பதவிக்காலம் முடியும் முன்னர் சதாம் மீதான விசாரணைகள் முடிவுக்கு வந்துவிடும் என்றும்- அவர் கூறியுள்ளார்.

அல் அராபியா தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். சதாம் மீதான வழக்கு விசாரணைகள் இன்னும் இரண்டு மாத காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குற்றங்களை விசாரிக்கும் பிரதான நீதியரசரையும் தமது சட்டத்தரணியையும் சதாம் ஹுசைன் இன்று சந்திக்கவுள்ளார்.

இதுவரை சதாமுக்கு எதிராக ஒரேயொரு வழக்கே பதிவு செய்யப்பட்டுள்ளது.

1982ஆம் ஆண்டில் அவரைப்படுகொலை செய்வதற்காக நடந்த முயற்சிகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அதிகளவான ஷியா முஸ்லிம்களை அவர் படுகொலை செய்துள்ளார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டாகும்.

# சீனா - ஐரோப்பிய சமூகத்திற்கிடையிலான பிரச்சினைக்குத் தீர்வுகாணப் பேச்சுகள்

சீனாவுக்கும் ஐரோப்பிய சமூகத்திற்கும் இடையில் தைக்கப்பட்ட ஆடைகள் வர்த்தகம் தொடர்பாக இரண்டு மாதகாலமாக இருந்துவரும் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் மேற்கொள்ளப்படும் பேச்சுகள் ஐந்தாவது நாளாகவும் நேற்று பெய்ஜிங்கில் நடைபெற்றது.

ஐரோப்பிய நாடுகளின் துறைமுகங்களில் உள்ள களஞ்சிய சாலைகளில் தேங்கியுள்ள 8 கோடி ஆடைகளை விற்பனைக்கு விடுவது தொடர்பாக பிரேரணைகளை ஐரோப்பிய சமூகத்தின் பிரதிநிதி தயாரித்துள்ளார்.

ஜூன் மாதம் 10ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஐரோப்பிய நாடுகளுக்கு சீனா ஏற்றுமதி செய்யக்கூடிய தைக்கப்பட்ட ஆடைகளின் எண்ணிக்கை ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளதனால், அதற்கு மேலதிகமாக சீனா அனுப்பியுள்ள தைத்த ஆடைகளை ஐரோப்பிய சமூக சுங்க அதிகாரிகள் களஞ்சியசாலைகளில் தடுத்துவைத்துள்ளனர்.

இருந்தபோதிலும் களஞ்சியசாலைகளில் தேக்கிவைக்கப்பட்டுள்ள சீனாவின் தைக்கப்பட்ட ஆடைகள் தொடர்பாகவும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

நெதர்லாந்து, டென்மார்க், சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகள் உடனடியாக இந்த ஆடைகள் சந்தைக்கு விடுவிக்கப்படாவிட்டால் தமது நகரங்களில் உள்ள விற்பனை நிலையங்களை மூடவேண்டிய நிலை ஏற்படும் என்றும், இதனால் பல்லாயிரக்கணக்கானவர்கள் தமது தொழிலை இழந்துவிடுவார்கள் என்றும் தெரிவித்துள்ளன.

ஆனால் பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகள், தைக்கப்பட்ட இந்த ஆடைகள் ஐரோப்பிய நாடுகளின் சந்தைக்கு விடுவிக்கப்படக்கூடாது என வலியுறுத்தியுள்ளன.

ஐரோப்பிய சமூக வர்த்தக ஆணையாளர் பீட்டர் மென்டெஸ்ட்டர் கருத்து வெளியிடுகையில், களஞ்சிய சாலைகளில் வைக்கப்பட்டுள்ள தைக்கப்பட்ட ஆடைகள் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று தெரிவித்துள்ளார். (க-8)

# 'ரொய்டர்ஸ்' ஊழியர்கள் மீது பக்தாத்தில் இராணுவம் சூடு!

## ஒருவர் பலி; மற்றொருவர் படுகாயம்!!

பக்தாத், ஓக.30

ஈராக் தலைநகர் பக்தாத்தில் அமெரிக்க துருப்பினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் நடந்த மோதலை படம் பிடிக்கச் சென்ற 'ரொய்டர்ஸ்' செய்தி நிறுவன தொழில்நுட்பவியலாளர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணித்தார். அவருடன் சென்ற புகைப்படப் பிடிப்பாளரும் படுகாயமடைந்தார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேற்கு பக்தாத் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரு தரப்பினருக்கும் இடையில் நடந்த மோதலை படம்பிடித்துக் கொண்டிருந்தபோது, அமெரிக்க படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது என பொலீஸார் தெரிவித்தனர்.

35 வயதான வாலீட் காலெட் என்ற தொழில்நுட்பவியலாளரே உயிரிழந்தார். அவரது காரை ஓட்டிச்சென்ற புகைப்படப் பிடிப்பாளர் ஹால்டர் காடம் என்பவர் காயமடைந்தார் என்று 'ரொய்டர்ஸ்' செய்தி நிறுவனத்தின் பக்தாத்திற்கான சிரேஷ்ட செய்தியாளர் அலெஸ்டெயார் மெக்டொனால்ட் தெரிவித்தார். தாக்குதலுக்குள்ளான இருவரும் 'சினைப்பர்' துப்பாக்கி மூலம் சுடப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு பக்தாத்தில் 2ஆம் அல் - குவாரா பள்ளிவாசலுக்கு அருகில் வைத்து அமெரிக்கத் துருப்பினர் செய்தியாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர் எ[illegible] பள்ளிவாசலின் பிரதான மதகுரு தெரிவி[illegible]ர்.

இந்தச் சம்பவம் குற்[illegible] அமெரிக்க துருப்பினர் வெளியிட்ட அறி[illegible]யில், ஈராக்கிய பொலீஸாரின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு எதிர்த் தாக்குதல் நடத்தியபோதே இவர்கள் இருவரும் தாக்கப்பட்டனர் என்றும்-

தீவிரவாதிகளின் இந்தத் தாக்குதலினால் பல பொலீஸ் அதிகாரிகள் காயமடைந்தனர். ஒரு பொதுமகன் உயிரிழந்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்றும்-

தாக்குதலின்பின்னர் அவரது காரை சோதனை செய்தபோது குண்டுகள் போன்றவை மீட்கப்பட்டன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.(க-8)

# பாக். விஞ்ஞானி அப்துல் காதிர்கானை அமெரிக்காவிடம் ஒப்படைக்க முடியாது

### பாகிஸ்தான் தூதுவர் உறுதி

இஸ்லாபாத், ஓக. 30

பாகிஸ்தான் அணு ஆராய்ச்சி விஞ்ஞானி அப்துல் காதிர்கானை அமெரிக்காவுக்கு நாடு கடத்த முடியாது. அமெரிக்கா எம்மை நட்பு நாடாக பார்க்கிறதா அல்லது எதிரி நாடாக பார்க்கிறதா என்பது எமக்குத் தெரியவில்லை. நட்பு நாடாக பார்க்கவேண்டும் என்றுதான் நாங்கள் விரும்புகிறோம் என்று அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதர் ஜஹாங்கீர் கராமர் கூறியுள்ளார்.

தற்போது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் அணு ஆயுதத்தின் தந்தை அப்துல் காதிர்கானை தம்மிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்கா வற்புறுத்தி வருகிறது. இதனையடுத்தே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

விஞ்ஞானி அப்துல் காதிர் கானை நாங்கள் கைதுசெய்து விசாரணை நடத்திவிட்டோம். அமெரிக்காவுக்கு என்னென்ன ஒத்துழைப்புகள் வழங்க வேண்டுமோ அத்தனையும் கொடுத்துவிட்டோம். இதற்குமேல் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று அவர் மேலும் கூறினார்.

பாகிஸ்தானின் அணு ஆராய்ச்சி விஞ்ஞானி அப்துல் காதிர்கான் அணு ஆயுத தொழில்நுட்பங்களை இவர் பல்வேறு நாடுகளுக்கு கடத்தியதாகவும், தீவிரவாதிகளுக்கு இவர் அணு ஆயுதங்களை தயாரிக்க உதவியதாகவும் புகார் கூறப்பட்டது.

அமெரிக்காவின் நிர்பந்தத்தின் பேரில் இவரை பாகிஸ்தான் அரசு கைதுசெய்து வீட்டுக்காவலில் வைத்தது. அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தியது.

விஞ்ஞானி அப்துல் காதர்கானை நாடு கடத்தும்படியும் விசாரணைக்காக தங்களிடம் ஒப்படைக்கும்படியும் பாகிஸ்தானை அமெரிக்கா வற்புறுத்தியது.

ஆனால் அமெரிக்காவின் நிர்ப்பந்தத்துக்கு பணிய பாகிஸ்தான் மறுத்துவிட்டது.

# முஸ்லிம் நாடுகளில் மதவெறி பரவ அமெரிக்க ஜனாதிபதியே காரணம்

### சல்மான் ருஷ்டி கருத்து

முஸ்லிம் நாடுகளில் மதவெறி பரவியதற்கு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷே காரணம் என்று சர்ச்சைக்குரிய இந்திய எழுத்தாளர் சல்மான் ருஷ்டி குற்றம் சாட்டியுள்ளார்.

லண்டனில் தங்கியுள்ள இந்திய எழுத்தாளர் சல்மான் ருஷ்டி 'சாத்தானின் கவிதைகள்' என்ற சர்ச்சைக்குரிய புத்தகத்தை எழுதி பிரபலமானவர். இவருக்கு முஸ்லிம் நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. இவருக்கு மரண தண்டனை விதிக்க ஈரான் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சல்மான் ருஷ்டியின் புதிய புத்தகம் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. அந்த விழாவில் சல்மான் ருஷ்டி பேசுகையில்,

''எனது இளமைக் காலத்தில் இஸ்லாம் மதம் போருக்கு எதிரான மதமாக இருந்தது. தற்போது அனைத்தும் மாறிவிட்டது. 1950 மற்றும் 60ஆம் ஆண்டுகளில் காஷ்மீர் மிகவும் அமைதியான பிரதேசமாக இருந்தது. 'ஜிகாத்' என்ற புனித போரை பெரிய அளவில் பரவச் செய்வதில் அல்-ஹெய்டா தலைவர் ஒஸாமா பின்லேடன் கூட தோல்வியடைந்து விட்டார். ஆனால், இந்த காரியத்தை அமெரிக்க அதிபர் புஷ் செய்துவிட்டார். முஸ்லிம் நாடுகளில் தற்போது மதவெறி போக்கு அதிகரித்துள்ளதற்கு அதிபர் புஷ்ஷின் நடவடிக்கைகளே காரணம்'' - என்றார் அவர்.

## சேதுசமுத்திர கால்வாய்த் திட்டம் தொடர்பான ஆய்வரங்கு

சேதுசமுத்திர கால்வாய்த் திட்டம் தொடர்பாக நடைபெறவுள்ள ஆய்வரங்கில் தங்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்நிகழ்வினை யாழ்.பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கைக்கான பசுமை இயக்கம் மற்றும் சுற்றாடல் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து பொருண்மிய மதியுரையகம் நடத்தவுள்ளது.

சுற்றாடலில் ஏற்படும் தாக்கத்தினைப்பற்றி சுற்றாடல் நிறுவனத்தினைச் சேர்ந்த விஸ்ணு அவர்களும், சூழலியலில் ஏற்படும் தாக்கத்தினைப் பற்றி கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் Dr.ஜெயசிங்கம் அவர்களும், பொருளாதாரம் மற்றும் சட்டரீதியாக ஏற்படும் தாக்கம் பற்றி இலங்கைக்கான பசுமை இயக்கத்தைச் சேர்ந்த சுரஞ்சன் அவர்களும் கடற்றொழிலில் ஏற்படும் தாக்கத்தினைப் பற்றி யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் Dr.சூசையானந்தன் அவர்களும் சிறப்புரையாற்றவுள்ளனர்.

இதில் ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொண்டு தங்கள் கருத்துகளையும் தெரிவிக்கலாம்.

**இடம்:-** நூலக கேட்போர்கூடம், யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
**திகதி:-** 30.08.2005
**நேரம்:-** காலை 9.30 (39464)

**பொருண்மிய மதியுரையகம், வடக்கு - கிழக்கு.**

---

புலம்பெயர் இலக்கியப் படைப்பாளி நிருபா அவர்களது
## "சுணைக்கிது"
சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு

காலம்:- இன்று (30.08.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி
இடம்:- இணுவில் பொது நூலகம் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி, இணுவில்.
தலைமை:- முனைவர் ம.இரகுநாதன்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அன்புடன்
விழாக்குழுவினர்.
(39463)

---

## துயர் பகிர்கின்றோம்

**26.08.2005 இல் காலமாகிய எமது பாடசாலை ஆசிரியை**
**திருமதி தயாமதி சிவநாதன்**
**அவர்களின் அன்புத் தாயார்**
**திருமதி சரஸ்வதிதேவி தியாகராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மீசாலை விரசிங்கம் ம.வி.
மீசாலை. (39451)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்.

---

## Patrician Institutes
## இதய அஞ்சலிகள்

எமது முன்னாள் ஊழியர்
**எஸ்.ஜோன்சன் பிறேமானந்த்**

அவர்கள் 26.08.2005 அன்று வெள்ளிக்கிழமை பிரான்ஸ் நகரில் அகால மரணம் அடைந்த செய்தியை அறிந்து நாம் மிகுந்த வேதனையடைகின்றோம். இவர் எமது நிறுவனத்தில் நீண்டகால ஊழியராக வேலைசெய்தவர் என்பதும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக எமது நிறுவனத்தில் இருந்து விலகி வெளிநாடு சென்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரின் இழப்பினால் மிகுந்த வேதனை அடைந்திருக்கும் மனைவி, பிள்ளை, உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*59, St. Patrick's Road, Jaffna.* (C/44851)

பதிவாளர், அலுவலர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள்.

---

## இணைய வானொலியில் இணைய வாருங்கள்!

உலகெல்லாம் ஒரே ஒலியாக இணையத்தளத்தின் ஊடாக ஒலித்துக் கொண்டிருந்த உலகத் தமிழர் வானொலி தனது சேவையை இந்த மூன்றாவது ஆண்டு நிறைவில் செய்மதியூடாகவும் விஸ்தரித்துள்ளது.

இந்தச்சந்தர்ப்பத்தில் எம்முடன் இணைய உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்...

- நாங்கள் எதிர்பார்ப்பவர் நீங்களா?
- இளமையும் துடிப்பும் புதுமைத் தேடலும் உங்கள் இயல்பா?
- உலக விவகாரங்களுடன் முத்தமிழிலும் நல்ல பரிச்சயம் உண்டா?
- செய்தி, நிகழ்ச்சி மற்றும் விளம்பரங்களுக்கு ஏற்ற குரல் வளம் உங்களுடையதா?

- அவ்வாறானால் எங்கள் ஒலிபரப்பாளர் பயிற்சிப் பிரிவில் இணைந்து உங்கள் குரலையும் சர்வதேசம் எங்கும் ஒலிக்கச் செய்யலாம்!

- கொழும்பில் தங்கியிருந்து பயிற்சிபெற ஆயத்தமாகவும் மேற்கூறிய தகைமைகளும் இருப்பவர்கள் மட்டும் உங்கள் விபரம் அடங்கிய விண்ணப்பங்களை உடன் அனுப்பிவைக்கவும்

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-
**விளம்பர இலக்கம் – 2692,**
**C/o உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.**
(39460)

---

## யாழ். வலய அதிபர்களுக்கு

யாழ்ப்பாணம், ஓக.30

யாழ். பாடசாலை மேம்பாட்டு திட்டவேலைகளை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்களும் விடயச்செயற்பாட்டு அறிக்கைகளை தத்தம் கோட்டக் கல்விப் பணிப்பாளருடாக இணைப்பாளரிடம் நாளைய தினத்துக்கு முன்னர் அனுப்பிவைக்கும்படி யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (9)

---

## தேவை

**சுன்னாகத்தில் உள்ள கணனிக் கல்வி நிலையத்திற்குப் பின்வருவோர் தேவைப்படுகின்றனர்.**

- ✱ பக்கவடிவமைப்பாளர் (D.T.P., Tamil, English Typing)
- ✱ வரவேற்பாளர் (A/L வர்த்தகத்தில் சித்தி, M.S. Office)
- ✱ அலுவலக உதவியாளர்
- ✱ இரவுநேர காவலாளி (50 வயதிற்கு மேற்பட்டவர்)

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 07-09-2005**

**விளம்பர இல. 2688**
**C/O உதயன்.**
(39414)(29-12-11)

---

## VACANCY

SAAMSTECH நிறுவனத்திற்கு வீட்டிவிருந்து தமிழ் மற்றும் ஆங்கிலம் Typing செய்யக்கூடியவர்கள் உடன்தேவை. வீடுகளில் Computer உள்ளவர்கள் நேர்முகத் தேர்வுக்கு முதலாம், 2ஆம், 3 ஆம் திகதிகளில் காலை 10மணி - மாலை 5 மணிவரை சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும். (39453)

**SAAMSTECH**
**841, Hospital Road, Jaffna.**

---

## IIS CITY CAMPUS
### BSc IT / BBA

மாணவர்களே !

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த சர்வதேசப் பல்கலைக்கழகமொன்றின் மேற்படி கற்கைநெறிகளை மிக விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம். குடாநாட்டு மாணவர் களுக்கு வரப்பிரசாதமாக அமையவுள்ள இச்சந்தர்ப்பத்தின் மூலம் நீங்கள் பட்டதாரியாக வேண்டுமென்ற கனவினை நனவாக்கிக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களை செப்ரெம்பர் 5ம் திகதி உதயன் பத்திரிகையில் எதிர்பாருங்கள்.

Director
IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna.
T.P.No.: 021 222 8060, 021 222 2201

---

**ராஜா** யாழ்ப்பாணம்

சியாம், அஸின், பூஜா, லைலா நடித்த
## உள்ளம் கேட்குமே
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.) (சி-43380)

---

**மனோகரா** யாழ்ப்பாணம்

புரட்சிக்கலைஞர் விஜயகாந்த், ரம்பாகிருஸ்ணன், சாக்ஷி, பிரகாஷ்ராஜ் நடித்த
**வாஞ்சிநாதன்** (சிலதினங்களம் மட்டும்)
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30,
அடுத்த வெளியீடு: ஜெயம்ரவி, ரேணுகா மேனன் நடித்த
**தாஸ்** (சி-44110)

---

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். குளிரூட்டப்பட்டது.

சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின் நகைச்சுவைச் சித்திரம்
## இங்கிலீஸ்காரன்
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.) (சி-433363)

---

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடு ரக இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
**தாஸ்** (தீல்கள்) (கடைசி வாரம்)
அடுத்த வெளியீடு **கஜனி**
காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே). (சி-4118)

---

## விழிநீர் சொரிகின்றோம்....



**எமது மன்றத்தின் அர்ப்பணிப்புமிக்க அங்கத்தவராக இருந்து கடந்த 11 வருடங்களாக எமது திருப்பாடுகளின் நாடகங்களில் பிரதம இயேசு பாத்திரத்தை ஏற்று, நடித்து உணர்வுகளால் மக்களோடு உறவாடிய கலைஞனாகிய**

### ஸ்.ஜோன்சன் பிறேமானந்த்

அவர்கள் 26.08.2005 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் விபத்தில் சிக்கி மறைந்த செய்தி அறிந்து அதிர்ச்சியும், ஆறாத் துயரும் அடைந்துள்ளோம்.

மறைந்த எம் கலைஞனுக்குக் கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்து, அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்து துயரில் மூழ்கி நிற்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.* (சி-44856)

**இயக்குநர், அங்கத்தவர்கள் திருமறைக் கலாமன்றம்.**

---

## கண்ணீர் அஞ்சலி



எமது சித்த மருத்துவத்துறையின் 4 ஆம் வருட மாணவியான ச.அபிராமி அவர்களின் அன்புத் தந்தை

**கணபதிப்பிள்ளை சரவணபவன்**

அவர்களின் இழப்பால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம் யாழ்.பல்கலைக்கழகம்.**
(39461)(29-12-11)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நடராசா அன்னரத்தினம்



நந்தாவில், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா அன்னரத்தினம் அவர்கள் நேற்று (29.08.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா (சிறாப்பர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, கனகரத்தினம், திலகவதி (மலேசியா), துரைரத்தினம், பவளரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுபத்திராதேவி, பரிமளகாந்தி, சியாமளாதேவி(ஜேர்மனி), ரமணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பத்மநாதன் (முன்னாள் உரிமையாளர் நாதன் ரான்ஸ்போட், கோண்டாவில்), சிவபாலசிங்கம், பாலச்சந்திரன் (ஜேர்மனி), ஜெயக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், கணநாத் (HNDA உயர்தொழில்நுட்ப நிறுவனம், 2ஆம் வருடம்), கபில்நாத் (E.E. தொழில்நுட்பக் கல்லூரி, மாணவன்), காலஞ்சென்ற புராதனி (கொக்குவில்), சியாந்தன் (ஜேர்மனி), ஜெயசாளினி, ஜெயதினி, பிரசன்னா (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2005) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். **தகவல்:**

**நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.** (39466)(29-12-11)

**ந. பத்மநாதன் (மருமகன்)**

### பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் கோபாலசாமி ஐயர்

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வாழ்விடமாகவும் கொண்டவரும் சண்டிலிப்பாய், அங்கணம்மைக் கடவை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தாக்களுள் ஒருவருமான பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் கோபாலசாமி ஐயர் 28.08.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெயலட்சுமியின் (இளைப்பாறிய சங்கீத ஆசிரியை) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சேதுமாதவ ஐயர், கார்த்திகேச ஐயர் (நடராசா ஐயர்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருகோணமலை, கஸ்கிஸன் வீதியிலுள்ள அவருடைய இல்லத்தில் நேற்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:-
(சி-44854)(29-12-11) **குடும்பத்தினர்.**

### திருமதி சிவகாமசுந்தரி சிவசாமி

புங்குடுதீவு, 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவசாமி ஆசிரியரின் அன்பு மனைவி சிவகாமசுந்தரி கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேராசிரியர் சி.இ.சதாசிவம்பிள்ளை (இளையப்பா உபாத்தியார்) - தங்கம்மா தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்ற பொன்னையா தம்பதிகளின் அன்பு மருமகளும் Dr.பாலசுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரியும் குணரஞ்சனி சிவநேசன் (ஜேர்மனி), சிவராசன் (ஜேர்மனி), காலஞ் சென்ற சிவகுமார், சிவமோகன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலசண்முகநாதன், ஜெயகௌரி, பங்கயச்செல்வி, திருவருள் ஆகியோரின் அன்பு மாமியாரும் கவிதா, வரதராஜன், தவபாலன், நரேந்திரன், நர்மதா, நிரோஷா, பைரவி, வசந்த், ஜெகத் ஜனனி, ஜெகத் சாயினி, சயன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் சாம்பவனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 591, காலி வீதி, கல்கிசையிலுள்ள மகிந்த மலர்ச்சாலையில் இன்று 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகளின் பின் காலை 10 மணியளவில் கல்கிசை இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:-
*44, A1, அல்பேட் பிளேஸ் தெகிவளை. (011)2731076*

Dr.S. பாலசுப்பிரமணியம் (சகோதரர்).
(சி-44850)(29-12-11)

# தமிழீழக் கடற்படைப் பயிற்சி இரண்டாவது அணிக்கு நிறைவு


சிறப்புத் தளபதி கேணல் சூசை உரையாற்றுகிறார்.

யாழ்ப்பாணம், ஒக.30

தமிழீழ கடற்படையின் துணைப் படைப்பயிற்சியை நூறு பேர் அடங்கிய இரண்டாவது அணி நேற்று நிறைவு செய்து வெளியேறியது.

இதற்கான நிகழ்வு வடமாராட்சி கிழக்கு ஆழியவளையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

இதில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன், கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம், வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள நான்கு பாசறைகளில் தமிழீழ கடற்படைத் துணைப் படைப் பயிற்சியை பொதுமக்கள் பெற்றுவருகின்றனர். முன்னதாக வடமராட்சியைச் சேர்ந்த நூறுபேர் கொண்ட அணி பயிற்சி பெற்று வெளியேறியிருந்தது. அதனைத் தொடர்ந்தே தற்போது மற்றொரு அணி பயிற்சியை முடித்துள்ளது. தொடர்ந்து பாசறைகளில் துணைப் படைப் பயிற்சிகளை அதிக எண்ணிக்கையிலான மக்கள் பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# ஆஸி. அரசிடம் நஷ்டஈடு கோரி அகதிச் சிறுவன் மனுத் தாக்கல்

சிட்னி, ஒக.30

ஆஸ்திரேலிய அரசிடம் நஷ்டஈடு கோரி 10 வயது அகதிச் சிறுவன் சார்பில் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஈரானைத் தாயகமாகக் கொண்ட ஷயான் பட்ரே என்ற சிறுவன் சார்பிலேயே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் ஆஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களமும் மற்றும் அகதிகளுக்கான தடுப்பு முகாம் நிர்வாகமும் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

சிறுவன் ஷயானின் குடும்பம் இரண்டாயிரமாம் ஆண்டின் முற்பகுதியில் ஈரானிலிருந்து அகதிகளாக ஆஸ்திரேலியாவை வந்தடைந்தது. அப்போது ஷயானுக்கு ஐந்து வயது. அவர்களை ஆஸ்திரேலிய அதிகாரிகள் அகதிகளுக்கான தடுப்பு முகாமில் தடுத்து வைத்துள்ளனர்.

தடுப்பு முகாமில் இடம்பெற்ற ஆர்பாட்டங்கள், கிளர்ச்சிகள், கண்ணீர்ப்புகை, தடியடிப் பிரயோகங்கள், தற்கொலைகள் மற்றும் தற்கொலை முயற்சிகள் போன்றவற்றை ஷயான் நேரடியாகப் பார்க்க நேர்ந்ததாகவும் -

அதனால் அவனது மனநலம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் -

ஆகவே, அதற்கான நஷ்டஈட்டைப் பெற்றுத்தரும்படியும் -

ஷயான் சார்பில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் உள்ள அகதிகளுக்கான தடுப்பு முகாம்களில் சுமார் 4 ஆயிரம் சிறுவர்கள் உள்ளனர். அவர்களில் முதல் தடவையாக ஷயான் சார்பில் நஷ்டஈடு கோரப்பட்டுள்ளது. (ஒ)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஒக.30

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகமும் சக வாழ்வு நிறுவனமும் இணைந்து நடத்தும் 'வன்முறையற்ற தொடர்பாடல், மத்தியஸ்தம் என்பற்றினூடாக சமாதானத்தை கட்டியெழுப்புதல்' என்ற தொனிப்பொருளிலான பயிற்சிப் பட்டறை நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும்

காலை 8.30 மணிமுதல் யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (9)

# இனப்பிரச்சினைத் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டால், இனமுரண்பாட்டை முடிவுக்குக் கொண்டுவரும் பெரும் பொறுப்பு என்னுடையது. நான் போருக்குப் போகமாட்டேன். நான் முழுமையாகப் போரை எதிர்க்கிறேன். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக நான் யாரையும் சந்தித்துப் பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன். பிரபாரனைக் கூடச் சந்திப்பதற்குத் தயார்'' - பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார் பிரதமர்.

''நான் பௌத்தன். எனினும் அனைத்து மதங்களையும் நான் மதிக்கின்றேன். அதுவே எனது பலம். '' - என்றும் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (க)

## சுடர் ஒளி அலுவலகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கு மகன் ஒருவர் இருக்கின்றார். பத்திரிகை அலுவலகத்துக்கு வந்திருந்த எழுத்தாளர் இளைய அப்துல்லாவும் ஊழியர்கள் இருவரும் சிறிய காயங்களுக்கு உள்ளாகினர்.

தாக்குதல் இடம்பெற்ற இடத்திற்கு அருகே மேலும் சிலர் நின்றிருந்தனர். எனினும், தெய்வாதீனமாக அவர்கள் காயம் ஏதுமின்றித் தப்பிக்கொண்டனர்.

சற்று உடல் பருத்த, 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரே கிரனேட்டுக்களை வீசிவிட்டுத் தப்பிச் சென்றார் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

சுடர் ஒளி ஆசிரியர்பீட ஊழியர் ஒருவர் தாக்குதல் இடம்பெறுவதற்குச் சில நிமிடங்கள் முன்னரே அலுவலகத்திற்குள் நுழைந்தார். அவர் வரும்போது அலுவலக வெளிவாயிலின் முன்பாக இளைஞர் ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்றிருந்ததை அவதானித்துள்ளார்.

அந்த நபரின் பின்புறமாக வந்த அவர் தனது மோட்டார் சைக்கிளின் 'ஹோர்னை' அழுத்தியுள்ளார். உடனடியாகத் தனது 'ஹெல்மெட்டை' அணிந்தபடி மோட்டார் சைக்கிளை நோக்கி நகர்ந்த அந்த நபர் ஊழியர் செல்வதற்கு இடமளித்துள்ளார்.

குறிப்பிட்ட ஊழியர் உள்ளே செல்வதற்காகவே பாதுகாப்பு ஊழியர் கதவைத் திறந்து வழிவிட்டுள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே சந்தேகநபர் அலுவலகத்தின் உள்ளே கிரனேட்டை வீசிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இத்தாக்குதலில் அலுவலகத்திற்குச் சொந்தமான மூன்று வாகனங்கள் மிகமோசமாகச் சேதமடைந்தன.

உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து பொலீஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை வெள்ளவத்தையில் உள்ள 'சுடர் ஒளி'-'உதயன்' கிளை அலுவலகம் மீதும் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் குண்டு வெடிக்காத காரணத்தினால் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

அதன்பின்னர் கோட்டை ரயில்நிலையம் முன்பாக ஜே.வி.பியினரின் ஆர்ப்பாட்டத்தைப் படமெடுத்த சுடர் ஒளிச் செய்தியாளர் யதுர்ஷன் தாக்கப்பட்டார். (க)

## தயாராகிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும் பவ்ரலின் கண்காணிப்புப்பணி தொடரும் என அந்த அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்ரிகோ தெரிவித்துள்ளார்.

இதற்கென 22 ஆயிரம் கண்காணிப்பாளர்கள் தேர்தல் நடைபெறும் 22 மாவட்டங்களில் நியமிக்கப்படுவர். வாக்கெடுப்பின் போது ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் இரண்டு கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்படுவர்.

வாகனங்கள் மூலம் நடமாடும் கண்காணிப்புப் பணியும் இடம்பெறும். பவ்ரலுடன் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களும் இணைந்து செயற்படுவர் என கிங்ஸ்லி ரொட்ரிகோ மேலும் தெரிவித்துள்ளார். (க)

## கொழும்புத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடிகளை எதிர்நோக்கினர்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து இந்தப் பதிவு நடைமுறைகள் ரத்துச்செய்யப்பட்டன.

நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின் தமிழர்கள் ஆங்காங்கே கைதுசெய்யப்படுவதும் தடுத்துவைக்கப்படுவதும் அதிகரித்துள்ளது. தமிழர் பகுதிகளில் வீடுகளில் புகுந்து திடீர் சோதனைகள் நடத்துவதும் உயர்ந்துள்ளது. இப்போது மீண்டும் பொலீஸ் பதிவும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கொழும்பில் சில பொலீஸ் நிலையங்களில் பொலீஸ் பதிவு விண்ணப்பப் படிவம் விநியோகிக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இதனால், தலைநகரில் வாழும் தமிழர்கள் மீண்டும் தமது அன்றாடக் கடமைகளைச் செய்துகொள்வதில் பெரும் நெருக்கடி நிலை தோன்றும் என்றும் -

படையினரின் அடாவடித்தனங்கள் அதிகரிக்கும் -என்றும் தமிழ் அமைப்புகள் அரசுக்கு சுட்டிக்காட்டியுள்ளன.

பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தலைமையில் கூடி ஆராய்ந்த பொலீஸ் உயரதிகாரிகளே பொலீஸ் பதிவை மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவரத் தீர்மானித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## அடுத்த வாரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயக்க, நிதியமைச்சர் சரத் அமுனுகம, அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோரும் செல்வதற்கு ஏற்பாடாகியுள்ளது.

அடுத்தமாதம் 14 முதல் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா எதிர்வரும் 15ஆம் திகதி விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.

இலங்கையின் அமைதி முயற்சிகள் குறித்து இந்த உரையின்போது ஜனாதிபதி முக்கியமான பல விடயங்களைச் சுட்டிக்காட்டுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவரும் உலக நாடுகளின் தலைவர்களையும் ஜனாதிபதி சந்திப்பதற்கான ஏற்பாடுகளை நியூயோர்க்கிலுள்ள இலங்கைக்கான ஐ.நா. நிரந்தர வதிவிட அலுவலகம் மேற்கொண்டுள்ளது. (க)

## அரசு - புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர். அரசும் அதனை ஏற்றுக் கொண்டுவிட்டதாக நேற்று செய்திகள் சில தெரிவித்தன. அவற்றை நிராகரித்த அமைச்சர், இந்த விடயம் இன்னமும் பேச்சு மட்டத்திலேயே இருக்கிறது என்று தெரிவித்தார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பான பேச்சுகளை இலங்கை யில் அதுவும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் நடத்துவதே அரசின் நிலைப்பாடு என்றும்-

இதுவிடயத்தில் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளில் முன்னேற்றம் இருப்பின் அதனை அரசு ஓரிருநாள்களில் அறிவிக்குமென்றும்- அமைச்சர் மேலும் கூறினார். (க)

## பிரதமர் மஹிந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன் ஜே.வி.பி. நடத்தும் பேச்சுகள் குறித்து ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்படுகின்றனவா என்று செய்தியாளரொருவர் கேள்வியெழுப்பினார். அந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர். அவர் மேலும் கூறியதாவது:-

ஜனதிபதித் தேர்தல் குறித்து நாம் பிரதமர் மஹிந்தவுடனேயே பேச்சுகளை நடத்துகி றோம். ஜனாதிபதியுடனோ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனோ நாம் பேசவில்லை. எனவே, ஜனாதிபதி கொண்டுள்ள நிலைப்பாடு, அவரின் எண்ணம் என்பன குறித்து நாம் கவலைப்படவோ, அக்கறைப்படவோ தேவையில்லை என்று கருதுகிறோம்.


தேசிய இனப்பிரச்சினை, தேசிய பொருளாதாரம் என்ற இரு முக்கிய விடயங்களை உள்ளடக்கி பல கோரிக்கைகளை நாம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் முன்வைக்கவுள்ளோம். இவை பற்றிப் பிரதமருடன் பேச்சு நடத்துவதற்காக கட்சியின் தலைமைச் செயலர் ரில்வின் சில்வா, நான் (விமல் வீரவன்ஸ), அநுர குமார திஸாநாயக்க ஆகியோரடங்கிய குழுவை கட்சி நியமித்துள்ளது.

ஜே.வி.பியின் நிபந்தனைகளை முன் வைத்து பிரதமர் மஹிந்தவுடன் நாளை முதல் பல சுற்றுப் பேச்சுகளை நாம் நடத்தவுள்ளோம். இந்தக் கொள்கைகளுக்கு பிரதமர் இணக்கம் தெரிவித்தாரானால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரை ஆதரிக்க நாம் தயார். அதனடிப்படையில் எமது கொள்கைகளை ஏற்பதாக அவர் பகிரங்க அறிவிப்பொன்றைச் செய்யவேண்டும்.

எமது நிபந்தனைகளைப் பிரதமர் ஏற்க மறுத்தால் ஜனாதிபதித் தேர்தலில் நாம் தனித்துக் களமிறங்குவோம். இதற்குரிய வேட்பாளரையும் நாம் தெரிவுசெய்தாயிற்று. பிரதமர் மஹிந்தவைத் தவிர வேறு எவருக் கும் ஆதரவு வழங்க நாம் தயாரில்லை. ஐ.தே. கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பிரிக்கும் வகையில் செயற்படுகிறார் என்பதால் அவருக்கு ஆதரவை வழங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை - இவ்வாறு விமல் வீரவன்ஸ மேலும் கூறினார். (க)

PC UPGRADES
தரமுயர்த்தல்

உங்கள் பாவனையில் உள்ள கணனிகளை தற்கால தொழில் நுட்பத்திற்கேற்ப அதி நவீன கணனிகளாக மாற்றித்தரப்படும்



■ உங்கள் கணனிகளின் பரிசீலனை இலவசம்
■ உங்கள் வீட்டிற்கு / அலுவலகத்திற்கு எமது தொழில் நுட்பவியலாளர்கள் வந்து பரிசீலிக்கும் வசதி

MICRO PC SYSTEMS
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா முருகேசு

பொன்னையா முருகேசு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் கனகரத்தினம் (வளநாடன்), விஜயரத்தினம் (ஹொலண்ட்), குணரத்தினம் (லண்டன்), ராஜேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயலக்ஸ்மி, ராஜசெல்வி, சோதிமலர், குலராசா, கந்தசாமி ஆகியோரின் அன்பு மாமனாரும் சஞ்சுதா, சரணியா, சஞ்சீவன், அசுந்து, சங்கீதா, ராஜேஸ்வரன், கரன், குரு, ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2005) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு வேலொண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுத்தோட்டம்,
நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி. (C/44858)

தகவல்:
மு. கனகரத்தினம்
(வளநாடன்)

## கந்தையா துரைச்சாமி



திருநெல்வேலி, வளாக வீதியைப் பிறப்பிடமாகவும் சங்கானை, சேச் றோட்டை வசிப்பிடமாகவும் இராமநாதன் வீதியில் தற்காலிகமாகவும் வசித்த கந்தையா துரைச்சாமி நேற்று (29.08.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையாவின் மகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.08.2005) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

தகவல்:
சி.சுகுமாரன்
76/60, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். (39467)

பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.